தர்க்கபாஷை.

இஃது

வண்ணையம்பதி

குமாரசாமிமுதலியார் [illegible]

[illegible]

இந்நூலை யாராய்ச்சிசெய்து

பரிசோதித் தச்சிடுவித்தபடி

அவர் குமாரர்

அத்துவக்காத்து

பாலசிங்கம் அவர்கள்

[illegible]வித்தனர்.

[illegible]

JAFFNA:
THE 'YOUNG MEN OF JAFFNA'
1904.

TARKHA BHASAI

தர்க்கபாஷை.

இந்நூல்

வல்வையம்பதி

குமாரசாமிமுதலியார் கதிரைவேற்பிள்ளை
KATIRAIVELPILLAI
ஸ்ரீ கீதபதிநி.

வடநூலோடாராய்ச்சிசெய்து

பரிசோதித் தச்சிடுவித்தபடி.

அவர் குமாரர்

அத்துவக்காத்து

பாலசிங்கம் அவர்கள்

அச்சிடுவித்தனர்.

மூன்றாம் பதிப்பு.

JAFFNA:
THE "YOUNG MEN OF JAFFNA" PRESS.
1904.

. ஏழுபதார்த்தங்களைக் கூறுஞ் சித்தாந்த முத்தர்வலிமுதலிய நவீன தர்க்கம்போலாது பதினாறு பதார்த்தங்களைக் கூறும் பிராசீன தர்க்கமாகிய இந்நூல் சம்ஸ்கிருதபாஷையிற் சிவகேசவமிசிரனால் இயற்றப்பட்டுத் துறைசைமங்கலஞ் சிவப்பிரகாசரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுக் காலத்துக்குக் காலமொன்றன்பின்னொன்று ஏட்டுப்பிரதிகளிலெழுதப்பட்டு வழுவமைந்து வசனமயங்கிச் சிக்குண்டு பயன்படாது கிடந்ததனை யாம் பரிசோதித்தெமது இஞ்சிறிபுக்கிக் கியன்றவாறே வழுவறுத்துச் சிக்கறுத்துப் பயன்படுநூலாக்கி யச்சிடுவித்தாம். இதனை யாம் முதலாமுறையச்சிடுவித்தபோது யாழ்ப்பாணத்தில், நமக்ககப்பட்டிருந்த தொரே யேட்டுப்பிரதியே. அப்பிரதியின்கணுள்ள வழுக்களைக் களைதற்குச் சம்ஸ்கிருதத்திலியற்றப்பட்ட கௌதமரது நியாயசூத்திரவிருத்தியுஞ் சித்தாந்த முத்தாவலியும் உபகாரகருவிகளாயின. முதலாம்பதிப்புப் பிரங்கமாயினபின் சிவகேசவமிசிரரியற்றிய சம்ஸ்கிருதமுதனூல் நமக்ககப்பட்டமையால் அம்முதனூலோடு தமிழ்மொழிபெயர்ப்பை யெதிர்வைத்தாராய்ந்து சுத்தப்படுத்தி யிவ்விரண்டாம்பதிப்புத் தரலாயினோம்.

இந்நூல் கௌதமர் விதித்த தர்க்கத்தின்வழித்தாயினும், கணாதர்கர்த்த வைசேடிகத்தோடு கலப்புற்றிருக்கின்றது.

தர்க்கபாஷையாகிய இந்நூல் தர்க்கசூடாமணி, தர்க்கபரிபாஷையென்றும் வழங்குவர்.

ரு. க.

நிர்க்கண்டபத்திரம்.

	பக்கம்.
க வஸ்து பிரமாணம்.	௩—௪0
காட்சி.	கக—கசு
அநுமானம்.	கஎ—கக
க தற்பொருட்டநுமானம்.	கக—உ0
உ பிறன்பொருட்டநுமானம்.	உ0
௩ அந்நுவயவியதிரேகம்.	உ0—உக
௪ கேவலவியதிரேகி.	உக—உஉ
௫ கேவலாந்நுவயி ...	உ௩
3 உபமானம்.	உ௮—உ௯
4 சப்தம்.	உ௯—௩௯
உ வஸ்து பிரமேயம்.	௪0
1 ஆன்மா. ...	௪0—௪க
2 உடம்பு.	௪௩—௪உ
3 இந்திரியம்.	௪உ—௪௩
க ஆக்கிராணம்.	
உ இரசநம்	
௩ சட்சு.	
௪ துவக்கு.	
௫ சுரோத்திரம். ...	
௬ மநம். ...	
4 அர்த்தம்.... ...	௪[illegible]
க திரவியம்.	௪௫—[illegible]
க பிருதிவி. ...	௪௫
உ அப்பு.	௪௬

பக்கம்.

ங தேயு. ... சச—சரு
ச வாயு. .... சரு—சசு
ரு ஆகாயம். ... சஅ—ச௯
சு காலம். ... .ச௯—ரு௦
எ திக்கு. ... ரு௦
அ ஆன்மா .... ரு௦
௯ மனம். ... ரு௦—ருக
உ. குணங்கள் .. ... ருக
க உருவம். ... ருக
உ இரசம். ... ...ருக—ருஉ
ங கந்தம். ... ருஉ
ச பரிசம். ... ... ருஉ.
ரு சங்கியை. .... ருஉ—ருங
சு பரிமாணம் ... ருங
எ வேறுதல் .... ருங
அ சையோகம். ...ருங—ருச
௯ விபாகம். ... ருச
க௦ பரத்துவம். ... ருச
கக அபரத்துவம். ருச—ருரு
கஉ குருத்துவம். ... ருரு
கங திரவத்துவம். ருரு
கச சிநேகம். ... ருசு
கரு சத்தம். ... ருசு—ருஅ
கசு புத்தி. .. ருஅ
கஎ சுகம். ... . ருஅ
கஅ துக்கம். .... ருஅ
க௯ இராகம். ... ... ருஅ

பக்கம்.

உ௦ துவேஷம். ... ருஅ
உக பிரயத்தனம். ... ருஅ
உஉ தருமம். ... ருஅ
உங அதருமம்.... ருஅ
உச சம்ஸ்காரம் ... ருகூ
க வேகம். ...
உ பாவனை.
ங திதிஸ்தாபகம் ..
ங கருமம். ... ருகூ
க எழுதல் ... ... ருகூ
உ விழுதல். ... ருகூ—சா௦
ங முடக்கல் ... ... சா௦
ச நீட்டல். ... சா௦
ரு நடத்தல். ... ... சா௦
ச சாமானியம். ...... சா௦
க பரம். .... சா௦
உ அபரம். ... சா௦—சாக
ரு விசேடம். .... சாக
சா சமவாயம். ... சாக—சாஉ
எ அபாவம். .... சாஉ—சாங
5 புத்தி. .... சாங
க அநுபவம். .... சாங
க மெய்மை. ....
உ பொய்மை..... ...
உ நினைவு. ....
க மெய்மை ...
உ பொய்மை ....

பக்கம்

6 பக்ஷம் ௯௪
7 பிரவிருத்தி. ௯௪
  ௧ தருமம். ௯௪
  ௨ அதருமம். ௯௪
8 தோஷம். ௯௪
  ௧ காமம். ௯௪
  ௨ வெகுளி. ௯௪
  ௩ மயக்கம். ௯௪
9 பிரேத்தியபாவம். ௯௪
10 பலம். ௯௫
11 துக்கம். ௯௫
12 அபவர்க்கம். .... ௯௫—௯௬
௩ வது சமுசயம். ௯௬—௯௭
௪ வது பிரயோசனம். ௯௭
௫ வது திட்டாந்தம். ௯௭
1 ஒத்ததருமதிட்டாந்தம்.... ௯௭
2 வைதருமதிட்டாந்தம். ௯௭
௬ வது சித்தாந்தம். ௯௭
1 சர்வதந்திரம். ௯௭
2 பிரதிதந்திரம். ௯௭
3 அதிகரணம். ௯௭
4 உடம்பாடு. .... ௯௭—௯௮
௭ வது அவயவம். ௯௮
1 பிரதிஞ்ஞை. ௯௮
2 ஏது. ௯௮

பக்கம்

3 உதாரணம். ௬௮
4 உபநயம். ௬௮
5 நிகமநம். ௬௮
௮ வது தருக்கம். ௬௮—௬௯
௯ வது நிர்ணயம் ௬௯
௰ வது வாதம். ௬௯
௧௧ வது சற்பம. ௬௯—௭௦
௧௨ வது விதண்டை. ௭௦
௧௩ வது எத்துவாபாசம். ௭௦
1. அசித்தம். .... ௭௦—௭௧
க ஆசிரயாசித்தம். ... ௭௧—௭௨
உ சொரூபாசித்தம். ... ௭௨
க விசேடணாசித்தம். ... ௭௨—௭௩
உ. விசேடியாசித்தம். ௭௩
௩ அசமர்த்தவிசேடணாசித்தம் ௭௩
௪ அசமர்த்தவிசேடியாசித்தம். ௭௩-௭௪
௩ வியாப்பியத்துவாசித்தம். ௭௪
க சாத்தியத்துடனேயுடனிக ழ்ச்சியில்லாதது. ... ௭௪
உ சோபாதிகசம்பந்தி. ௭௪—௭௫
1 விருத்தம். ....௭௫—௭௬
2 அநைகாந்திகம். ௭௬
க சாதாரணஅநைகாந்திகம்
உ அசாதாரணஅநைகாந்திகம்.
3 பிரகரணசமம். ௭௭
4 காலாத்தியயாபதிட்டம். ... ௭௭—௭௮

பக்கம்.

கச வது சலம். ௭௬

கரு வது சாதி. ௭௯

1 உத்கருஷம். ...

2 அபகருஷம் ....

கசுஉ வது நிக்கிரகத்தாநம். ௮௦

தர்க்கபாஷை.

நியாயநூற்பிரவேசஞ் சுருங்கிய கேள்வியினு
லடைதலை மடியனும் வாஞ்சிக்கின்ற பாலனோவ
ன் அவனுக்கு யுத்தியங்கித தர்க்கபாஷையை யா
ன் சுருக்கி விளக்குகின்றேன்.

பிரமாணம், பிரமேயம், சம்சயம், பிரயோசநம்,
திட்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தருக்கம், நி
ர்ணயம், வாதம், சற்பம், விதண்டை, ஏத்துவா
பாசம், சலம், சாதி, நிக்கிரகத்தானங்களாகு தத்து
வஞானத்தால் உயர்சிறப்படைப.*

---

* உயர்சிறப்படைதலென்பது வீடடைதல். பிர
மாணாதிகளுடைய மெய்ம்மையறிவினன் மித்தியா
ஞானமாகிய பொய்ம்மையறிவுகளும்-அஃதகல, அ
துகாரணமாகப் பிறக்குங் காம வெகுளி மயக்கங்
களாகிய தோஷங்களும்-அஃதகல, அதன் காரிய
மாகப் பிறக்கும் புண்ணியபாவங்களாகிய பிரவிரு
த்தியகளும்-அஃதகல, அதன் காரியமாகிய பிறப்ப
களும்-அஃதகலுங்கால் அதனோடிகழுந் துக்கம
களும்-அத் துக்கத்தினது ஒழிவே நிச்சிரேயசமெ
ன்றும் அபவர்க்கமென்றுஞ்சொல்லப்படுகிற மோ
ட்சம் என்னுங் கௌதமர் கருத்தைச் சார்ந்தவரா
ய் நமது தார்க்கிகர் பிரமாணாதி பதினாறு பதார்த்த
ங்கள் தன்மையறிவால்வீடடைதலுளதாமென்று
கூறினரெனக்கொள்க. தர்க்கம் வழுவறக் கற்று,
அதன் பிரமாணங்களைத் துணைக்கொள்வானொரு
வன், ஆராயுங்கால், மெய்யிதுபொய்யிதுவென்றறி

உத்தேசம்
இலக்கணம்
பரீட்சை.

இது நியாயத்தினது முதற்சூத்திரம். இதன்பொருள், பிரமாண முதற் பதினாறுபொருள தன்மையறிவால் வீடடைதலுளதாமென்பது.

எவ்வளவும் பிரமாணமுதலியவற்றி னுத்தேச இலக்கண பரீட்சை பண்ணப்படாது, அவ்வளவு மவற்றி னுண்மையறி வுண்டாகாது; எங்ஙனம்? பாஷியகாரர் கூறினார் அங்ஙனம் இந்நூலது பிரவிருத்தி, உத்தேசமும், இலக்கணமும், பரீட்சையுமென மூன்றுவகைத்து.

உத்தேசமாவது பெயர்மாத்திரையாற் பொருளைச் சொல்வது. அதுவு மிச்சூத்திரத்தானே பெறப்படும்.

இலக்கணமாவது சிறப்பியல்பு. எங்ஙனமெனின், ஆவிற்குத் தாடி முதலிய உடைமை.

இலக்கியத்திற் கிலக்கணம் பொருந்துமோ பொருந்தாதோவென் றாராய்தல் பரீட்சை.

ஆதலின் இவ்விலக்கண பரீட்சைகள் பிரமா

ணரன்.—கடவுள் அருளியவேதம் யாது, கையர் இயற்றிய நூல் யாதென்றறிவான்.—ஒன்றேனும்பொய்ம்மைமொழிபுகலு மாகமமானது மற்றெப்பரிசினுஞ் சாமர்த்தியகாரியமாயினுந் திவ்வியயோக்கியமுடையதன்று, மனுடசிருட்டியாதல் வேண்டுமென் றறிவான்.—இவ்வகைபுரிதலறம் இவ்வகைபுரிதல் மறம் என்றறிவான்; ஆதலால், தர்க்கவித்தையை வீடடைதற்கு வழியாகுமென ஒருபடித்தாய் எவரும் கொள்ளற்பாற்று.

ணுதிகளுடைய உண்மையறிவின்பொருட்டவசியம் வேண்டின. அவற்றுள்ளு முதற்கணுத்தேசித்த பிரமாணத்திற்கிலக்கண முறையே கூறப்படும்.

௧. பிரமாணம்.

பிரமைக்குக் கரணம் பிரமாணம். இதிற் பிரமாண மிலக்கியம், பிரமாகரணத்தன்மை யிலக்கணம்.

அற்றாயிற், பிரமாணம் பிரமைக்குக் கரணமாயினதற்குப் பலங் கூறல்வேண்டும்; கரணத்திற்குப் பலமுடைமை நியமமாதலின் அஃதொக்கும்; அதற்குப் பிரமையே பலம். பலமாவது சாதித்தல். துணித்தற் கருவியாகிய நவியத்திற்குத் துணித்தலே பலம்.

பிரமை. பிரமாணத்திற்குக் கரணமாகக் கூறப்பட்ட பிரமையாவது யாது? யதார்த்த அநுபவம் பிரமை; யதார்த்தமென்றது அயதார்த்தமாகிய ஐயத்திரிவு தருக்க உணர்வுகட்கு விலக்கு. அநுபவம் என்றது*ஸ்மிருதிக்கு விலக்கு. அது ஸ்மிருதிக்கு வேறாகிய உணர்வு.

கரணம். கரணமாவதுயாது? சாதகதமங் கரணம். உயர்ந்த சாதகஞ்சாதகதமம். உயர்ந்த காரணமென்பதேயிதன்பொருள். சாதகங் காரணம் என்பன ஒருபொருட் சொற்கள்.

காரணம். காரணமாவதியாதெனிற் கூறுதும். நியதமாய்ப் பிறிதொன்றற்காதலின் றிக் காரியத்திற்கு முன்னிற்றலுடையது யாது, அது காரணம்; ஆடைக்கு நூலுடா முதலியன போல்வ. ஆ

---

*ஸ்மிருதி-நினைவு.

டை தோன்றுழித் தன்னியல்பின்வந்த கழுதை முதலியவற்றிற்கு முன்னிற்றலுண்டேயாயினும், அது நியமமன்று. நூலுருவிற்கு நியதமாய் முன்னிற்றலுண்டேயெனின், அது பிறிதொன்றற்காகும்; ஆடையுருத் தோற்றத்தலைமைதலின். ஆடையைக்குறித்தன் காரணமெனிற் கற்பனை பெருகும். ஆதலிற் பிறிதொன்றற்காகாமையாய் நியதமாய் முன்னிற்பதன்றன்மை காரணத்தன்மை. பிறிதொன்றற்காகாது நியதமாய்ப் பின்னிற்பதன் றன்மை காரியத்தன்மை.

ஒருவன், காரியத்தாலே தொடரப்பட்ட அந்நுவயவியதிரேகி காரணமென்றான். அது பொருந்தாது; நித்தியவிபுவாய வான் முதலியவற்றிற்குக் காலத்தானுமிடத்தானும் வியதிரேகமின்மையிற் காரணமன்மைவரவேண்டுதலின்.

சமவாயிகாரணம்

காரணமுஞ் சமவாயி, அசமவாயி, நிமித்தமென்றுங் கூறுபாட்டான் மூவகைப்படும். அவற்றுள், எதன்கட் சமவேதித்துக் காரியந்தோன்றும், அது சமவாயிகாரணம். எங்ஙனம்? நூல்களாடைக்குச் சமவாயிகாரணம். நூலின்கண்ணே யாடை சமவேதித்துத் தோன்றும், நாடாமுதலியவற்றினில்லை.

அற்றாயின், ஆடைக்கு நூலோடும் நாடாமுதலியவற்றோடுஞ் சம்பந்தமுளதாக, நூலின்கண்ணே யாடை சமவேதித்துத் தோன்றும்—நாடாமுதலியவற்றின்கணில்லையென்பதெங்ஙனம்? அஃதொக்கும்; அச்சம்பந்தம், சையோகமுஞ் சமவாயமு

மென இருவகைப்படும். அவற்றுள், நீக்கமின்றியிருப்பவற்றின் சம்பந்தம், சமவாயம்; ஏனையவற்றது சையோகமே. நீக்கமின்றியிருப்பனயாவை? எவற்றுளொன்று அழியாததாய் மற்றொன்றைப் பற்றியே நிற்கும், அவை நீக்கமின்றியிருப்பன. எங்ஙனம்? அவயவாவயவிகள், குணகுணிகள், வினைவினையதுகள், சாதிவியத்திகள், விசேட நித்தியத் திரவியங்களென்பனவே. அவயவி முதலியன முறையே கெடாதனவாய அவயவ முதலியவற்றைப் பற்றியே நிற்கும்; கெடுமவத்தையிற் பற்றாமையே நிற்கும் எங்ஙனம்? நூலதுகேட்டின் ஆடையும் *ஆசிரயத்ததுகேட்டிற் குணமும். கெடுதற்றன்மையாவது கெடுதற்காரணக் கூட்டங்கூடுதல். நூலாடைகளும் அவயவாவயவிகளாதலின், அவற்றது சம்பந்தஞ் சமவாயம்; நீக்கமின்றியிருத்தலின். நாடா ஆடைகட்காயிற் சமவாயமின்று; நீக்கமின்றியிருத்தலின்மையின். நாடா ஆடையைப்பற்றி நிற்றலும் இன்று. ஆடை நாடாவைப்பற்றி நிற்றலும் இன்று. ஆதலின் அவற்றது சம்பந்தஞ் சையோகமே. ஆதலின், இங்ஙனமாடை நூலிற் சமவேதம். எதன்கட் சமவேதித்துக் காரியந்தோன்றும், அது சமவாயிகாரணம், ஆதலின், நூல்களே யாடைக்குச் சமவாயிகாரணம்; நாடாமுதலியன அல்ல. ஆடையுந் தற்புணருருவமுதலியவற்றிற்குச் சமவாயிகாரணம். இங்ஙனமட்பிண்டமுங் குடத்திற்குச் சமவாயிகாரணம். குடமுந் தற்புணருருவமுதலியவற்றிற்குச் சமவாயிகாரணம்.

---

* ஆசிரயம்-பற்றுக்கோடு.

அற்றாயின், எப்பொழுது குடமுதலியன தோன்றும் அப்பொழுதே தற்புணருருவமுதலியனவுந் தோன்றும்—ஆதலின் ஒருகாலத்திற் றோன்றின—ஆதலிற் குணகுணிகட் கிடவலக்கோடுபோலக் காரிய காரணத்தன்மையேயில்லை, முற்பிற்பாடின்மையின்—ஆதலிற் குடந் தற்புணருருவமுதலியவற்றிற்குச் சமவாயிகாரணமன்று—சமவாயிகாரணங் காரணவிசேடமாதலின்-எனிற் கூறுதும்.

குணகுணிகட் கொருகாலைத் தோற்றமின்று. ஆயின், திரவியங் குணமின்றியே முற்றோன்றும்; பின் அதிற் சமவேதித்துக் குணங்கடோன்றும். ஒருகாலைத்தோற்றமாயிற், குணகுணிகட்கு ஒரு காரணக் கூட்டத்தனவாதலில் வேறுபாடில்லாதல் வேண்டும்;காரியவேறுபாடு காரணவேறுபாட்டி னியதமாதலின். ஆதலின் முற்கணத்திற் குணமின்றியேயாய குடங் குணங்கட்கு முன்னிற்பது. திரவியங் குணங்கட்குச் சமவாயிகாரணமாம். அப்பொழுது காரணவேறுபாடுமுண்டு. குடங் குடத்தைக் குறித்துக் காரணமன்றே; ஒன்றற்கே முற்பிற்பாடின்மையின். குடந் தானே தன்னைக்குறித்து முன்னிற்பதும் பின்னிற்பதுமில்லை. தன் குணங்களைக்குறித்து முன்னிற்றலின், திரவியங் குணங்கட்குச் சமவாயிகாரணமாம்.

அற்றாயின், இங்ஙனமாயின், குட முற்கணத்திற் கட்புலமின்மையாதல்வேண்டும். அருவத்திரவியத்துவமாதலில்; காற்றுப்போல. எத்திரவியம் பரிதா உற்பூதவுருவமுடையது, அத்திரவியங் கட்புலப்படுவது: திரவியமன்மையுமாதல்வேண்டும்; குணத

திற்கிடனாதற்றன்மையின்மையின்; குணத்திற்கிடனாவது திரவியமென்பது திரவிய இலக்கணம். அஃதொக்கும்; மிகவு நுண்ணிய குடம் முதற்கணத்திற் கட்புலனாற் கிரகிக்கப்படாதாயின் அப்பொழுது நமக்கிடையூறியாது? ஆதலின் முன்னர்க் குணமிலியாயே குடந் தோன்றுமென்னுமிது துணிவு. இரண்டு முதலிய கணங்களிற் கட்புலனாற் கிரகிக்கப்படும். முற்கணத்திற் குணத்திற்கிடனாதற்றன்மையின்மையிற் றிரவியமன்மையாதலில்லை; சமவாயிகாரணந் திரவியமென்னுந் திரவிய லக்கணப் பொருத்தத்தால் யோக்கியதையாற் குணத்திற்கிடனுமாதலின்.*

---

* நமது தார்க்கிகர் கடுந் திடரினூடு நுழைந்து உள்மறைந்துகிடக்குந் திரவியங்களைக் கவருகிற நிபுணமுந் தீட்சணமுமுடையவரேனுஞ் சிறுபான்மை வழுவுவது நூதனமன்று. முன்னர்க் குணமிலியாயே திரவியந் தோன்றும், அதினின்று குணந்தோன்றுமென்னுமிது நமக்குத் துணிவன்று. இவ்வாசிரியர் தாமே சொல்லுகிறபடி திரவியமென்பது குணத்திற்கிடனாதலென்னு மிலக்கணமுடையது, குணத்திற்கிடனாவதாந் தன்மை முற்கணத்தினிலதாயின் அக்கணத்தில் அதைத் திரவியமென்று கொள்வதெங்ஙன்?

திரவியமென்பதுளதாயதொன்று. உளதென்று சொல்லற்பாலது யாதுயாது, அதுஅது யாதேனுமோர் தன்மையினுளதாகவேண்டும். தன்மையின்றியும் திரவியமுளதாமென்பது அநர்த்தக வாக்கியமாம். எங்ஙனமெனின் திரவியமீண்டுளதெனவே, அத்திரவியம் பெரியதேனுஞ் சிறியதேனும்,

அசமவாயி காரணம். யாது சமவாயிகாரணத் தணுகியிருப்பதுந் துணிந்த காரணத்தன்மை யுடையதுமாயிருப்பது, அஃது அசமவாயிகாரணமென்று கூறப்படும். எங்ஙனம்? ஆடைக்கு நூலியையச் சமவாயிகாரணம; நூலியையாகிய குணமாடைச் சமவாயிகாரணமும் குணியுமாகிய நூல்களிலே சமவேதித்திருத்தலின், சமவாயிகாரணத்தணித்தாயிருத்தலின், பிறிதொன்றிற்காகாமையு மியற்கையுமாகிய முன்னிற்றற்றன்மையால் ஆடையைக்குறித்தும் காரணமாதலின். இங்ஙனம், நூலுருவமுமாடையை யடைந்த உருவிற் கசமவாயிகாரணம்.

அற்றாயின், ஆடையுருவிற் காடை சமவாயிகாரணம்; அதலின், தன்னையடைந்தேயிருக்கின்ற ஒரு தருமத்திற் காடையுருவைக்குறித் தசமவாயிகாரணத்தன்மை கூறத்தகும்; சமவாயிகாரணத்தணித்தாயிருத்தலின்: நூலுருவிற்குத் தகுதியன்று, அதற்குச் சமவாயிகாரணத் தணித்தாயிருத்தலின்மையின்; இங்ஙனமன்று; சமவாயிகாரணத்தின் சமவா

யுவதாக, அணுத் துணையேயாயினும் பேரத் துணையேயாயினும் ஓரிடத்தைத் தக்கதுவேண்டுமே. அப்பொருள் கண்ணுக்குத் தோன்றுவதாயின், உருவத்தன்மையுடையதாயும், தோன்றாதாயின் அருவத்தன்மையுடையதாயுமிருக்கவேண்டுமே; இவைபோல்வனவற்றால் திரவியமுளதென்றறியுங்கால் அஃது இன்ன இன்ன பரிசாய் இருக்கின்றதென்றறியும் அறிவு விடயமே தன்மை. இத்தன்மையே குணம். ஆதலால் குணமென்பது, தானே திரவியமாகாது, தான் திரவியத்தினின்று பிறிதொன்றாகாதாய்த்

யிகாரணத் தன்க்காயிருக்கலும் பரம்பரையாயச்
சமவாயிகாரணத்தனிக்காயிருக்கலின்

யாதொன்று சமவாயிகாரணமு

நிமித்தகாரணம். ௩௯ அசமவாயிகாரணமுமன்றாய் மற்றாங் காரணமாம், அது நிமித்தகாரணமென்று கூறப்படும். எங்ஙனம் துரீவேமா முதலியன ஆடைக்கு நிமித்தகாரணம்.

இக் காரணங்கண் மூன்றும் ..... இல்பொருட்காயின், நிமித்தகாரணமாத்திரம்; அதற்கோரிடத்துஞ் சமவாயமின்மையின், சமவாயமு

திரவியத்தைத் திரிக்கின்றவாது உள்ளத்தே தயுத்தியிறுப்பதுக்கப்பட்டுப் பிறக்கும் யோகமாகப் பொருட்டுப் பெயர்பெறுது கொடுக்கப்பட்டுக் கிடக்கும் மேதாசிட்டியென்று கொள்க.

குணமென்பதை மதோசிருட்டியாகக் கொண்டு, மதத்தின்கண்ணே இடத்த குணத்திற்குத் திரவியத்தின்கண்ணே சமவாயந் தோன்றற்று.—அதலான் திரவியந் தோன்றுங்காற் குணந் தோன்றியதில்லையென்று சொல்லின் ஒருவாறு பொருந்தும். எங்ஙனமெனின் குடமென்பது தோன்றியபின், அதினுருவங் குடத்தினின்று வெழுந்து கட்பொறியினிகழ்ந்த கதிர்களாற் கிரகிக்கப்படுவதாதலின் அக்கதிர்ச் சொரூபமாகிய உருவமே குடத்தின் குணமாகக் காண்கின்றவனுடைய உள்ளத்திற் கொள்ளப்படுவதால், அக்குணம் குடத்தின் சமவேதமென்றும் அதற்குக் குடஞ் சமவாயமென்றும் குடந் தோன்றியபோது குணந் தோன்றவில்லையென்றும் சொல்வதமையும். ஆயினும், இவ்வாசிரியர் இக்கருத்தைப்பற்றிக்கூறினரென்று நாம் சொல்லவல்லோம்.

ளபொருளிரண்டின் றன்மையாதலின். இக் காரணங்
கண் மூன்றினுள் யாதாயினு மெவ்வாற்றானு முய
ருமாயின், அதுவே கரணம்.

ஆதலின் பிரமைக்குக்கரணம் பிரமாணமென்னு
மிவ்விலக்கணந் துணியப்படும்.

உணரப்படாத பொருளினை யுணர்வு பிரமா
ணமென்பது பிரமாண இலக்கணமெனின் அஃதன்
று; ஒரு குடத்தின்கண்ணே குடமிது குடமிதுவெ
ன்றுணரப்பட்டதை யுணருந் தாரைக்காலுணர்வு
கட்கப்பிராமாண்யம் வரவேண்டுதலின். வேறுவே
றாகிய கணவிசேடத்தோடு கூடிய பொருட்கவர்ச்சி
யா னுணரப்படாத பொருளினை யுணர்தற்றன்மை
யுண்டென்பதன்று; காட்சியானுண்ணிய கால வே
றுபாட்டினது தெரியாமையின். வேறுபாடு தெரி
யின் கிரியையுந்தற் சையோகபிராய நான்கிற்கும் ஒ
ருமை யபிமான மின்றாதல் வேண்டும். பிரமாதாரு
ப்பிரமேய முதலிய பல காரணங்கள் பிரமைக்குள.
இவையெல்லாங் கரணமோ அல்லதல்லவோ கூறு
தும். பிரமாதாவும் பிரமேயமு மிருப்பினும் பிர
மை பிறவாமையினானும், இந்திரியார்த்த சையோ
காதி யுண்டாயின் விரைவிற் பிரமை பிறத்தலினா
னும், இந்திரியார்த்த சையோகாதியே கரணம். சா
தகத்தன்மை விசேடமின்றாயினும் இவ்வுயர்ச்சியா
னே யிதற்குப் பிரமாதா முதலியவற்றினின்று மதி
சயமாதலின், உயர்ந்த காரணங் கரணமென்று கூற
ப்பட்டது. இந்திரியார்த்த சையோகாதியே பிர
மைக்குக் காரணமாதலிற் பிரமாணம்; பிரமாதா மு
தலியன அல்ல. அப்பிரமாணங்களென்கு.

அங்ஙனை நியாயசூத்திரம்—பிரத்தியட்ச அநுமாந. உபமாந சப்தங்கள் பிரமாணங்கள்.

1. பிரத்தியட்சம.

காட்சியாவது யாது? சாட்சாற்காரிப் பிரமைக்குக் காரணம் பிரத்தியட்சம். யா திந்திரியத்தாற் றோன்றும், அது, சாட்சாற்காரிப்பிரமை. அஃதுஞ் சவிகற்ப நிருவிகற்பக் கூறுபாட்டால், இருவகைப்படும். அதற்குக் காரணமூவகை, ஓரிடத் திந்திரியம், ஓரிடத்துப் பொருளிந்திரியக் கூட்டம், ஓரிடத்து ஞானம்.

எவ்விடத் திந்திரியங் கரணம்? எப்போது நிருவிகற்பவு வப் பிரமை பலமாம், அப்போ திந்திரியங் கரணம். அவ்வாறே உயிர் மநத்தோடு கூடும்; மந மிந்திரியத்தோடு; இந்திரியம் பொருளோடு; இந்திரியங்கட் கடைந்ததை விளக்குந்தன்மை நியமமாதலின். ஆதலிற் பொருளோடு கூடிய இந்திரியத்தாற் பெயர் சாதி முதலியையில்லாத பொருண்மாத்திர மகப்படுக்கு நிருவிகற்ப ஞானந் தோன்றும். அந்த ஞானத்திற் கிந்திரியங் கரணம்; துணித்தற்கு நவியம் போல; இந்திரியார்த்தக் கூட்டமவாந்தர வியாபாரம். துணித்தற்க ாவியாகிய நவியத்திற்கு மரத்தோடு கூட்டம் போல; நிருவிகற்ப ஞானம் பலம்; நவியத்திற்குத் துணித்தல் போல.

எவ்விடத்துப் பொருளிந்திரியக் கூட்டங் கரணம்? எப்போது, நிருவிகற்பத்தின் பின்னர் பெயர் சாதி முதலியையுள்ள, சாத்தனிவன், பார்ப்பானிவன், கரியனிவன் என்னும் விசேடண விசேடியத் தன்மை அகப்படுக்குஞ் சவிகற்ப ஞானந் தோன்று

ம், அப்போது பொருளிந்திரியக் கூட்டங் கரணம்; நிருவிகற்பமே, அவாந்தர வியாபாரம், சவிகற்பஞானம் பலம்.

எவ்விடத்து ஞானங் கரணம்? எப்போது, கூறப்பட்ட சவிகற்பத்தின் பின்னர் வெறுப்பு புத்தி விழைவுபேட்கைகடோன்றும், அப்போது நிருவிகற்பஞானங் கரணம்; சவிகற்பமவாந்தர வியாபாரம்; வெறுப்பு முதலிய புத்திகள் பலம்.

சவிகற்பமுதலியவற்றிற்கு மிந்திரியமே கரணமென்பாருமுளர்

நடுவு தோன்றியனவாகிய சந்நிகர்ஷ முதலியன எவ்வளவோ அவையனைத்தும் அவாந்தர வியாபாரம்.

அறுவகைச் சந்நிகர்ஷம்

பொருளிந்திரியங்களுடைய சா சாற்காரிப் பிரமைக்கு ஏதுவாகிய சந்நிகர்ஷம்* யாது, அஃதறுவகையே. அவை சையோகம், சையுக்தசமவாயம், சையுக்தசமவேதசமவாயம், சமவாயம், சமவேதசமவாயம், விசேடணவிசேடியபாவமென்பனவே.

எப்போது சையோக சந்நிகர்ஷம்? எப்போது கண்ணாற் குடமிதுவென்று குடவிடயஞானந் தோன்றும், அப்போது கண்ணிந்திரியம், குடம் பொருள், அவற்றது சந்நிகர்ஷஞ் சையோகமே; நீக்கமின் பிரிருத்தலின்மையின். இங்ஙன மனமென்னு மகவிந்திரியத்தால், எப்போதான்மவிடய ஞானநானென்று தோன்றும். அப்போது மனவிந்திரியம்; அன்

* சந்நிகர்ஷம்—சம்பந்தம்

மா பொருள்; அவற்றது சந்நிகர்ஷஞ் சையோகமே.

எப்பொழுது சையுக்தசமவாய சந்நிகர்ஷம்? எப்பொழுது கண் முதலியவற்றாற் குடமாதியுருவமுதலியவை, குடத்தின்கணிலையுருவமுண்டென்று கிரகிக்கப்படும், அப்பொழுது கண்ணிந்திரியம்; குடமாதியுருவமுதலியனவை பொருள்; அவற்றினது சந்நிகர்ஷஞ் சையுக்தசமவாயமே. கண்ணோடு சையுக்தமான குடத்தில் உருவிற்குச் சமவாயமாதலின். இங்ஙன மகத்தால் ஆன்ம சமவேதமாகிய இன்பமுதலியவை கிரகிக்கப்படும்போது மிச் சந்நிகர்ஷமே. குடபரிமாணமுதலியவற்றின் கிரகிப்பிற் றன்மையைச் சந்நிகர்ஷமுமிக்ககாரணமென்று வேண்டப்படும்; சையுக்தசமவாயமுண்டாயினும், அஃதில்லாதபோது, செய்யுமக்கட் பரிமாண முதலியன கிரகிக்கப்படாமையின். சாந்தவைகச் சந்நிகர்ஷமெங்ஙனம்? அவை: இந்திரிய வயவவங்களோடு பொருளவயவங்கட்கு, இந்திரிய வயவிகளோடு பொருளவயவிகட்கு இந்திரிய வயவங்களோடு பொருளவயவிகட்கு, இந்திரிய வயவிகளோடு பொருளவயவங்கட்காய சந்நிகர்ஷங்கள்.

எப்பொழுது சையுக்தசமவேதசமவாய சந்நிகர்ஷம்? எப்பொழுது கண்முதலியவற்றாற் குடவுருவிற் சமவேதமான உருவத்தன்மைமுதலிய சாமானிய ஞானங் கலப்படும், அப்பொழுது கண்ணிந்திரியம்; உருவத்தன்மை முதலிய சாமானியம் பொருள். அதற்றது சந்நிகர்ஷஞ் சையுக்தசமவேதசமவாயமே. எங்ஙனம்? கண்ணோடு சையுக்தமான குடத்திலு

ருவஞ் சமவேதம்; அதன்கண், உருவத்தன்மைக் குச் சமவாயமாதலின்

எப்போது சமவாயசந்நிகர்ஷம்? எப்போது செவிப்புலனால் இது ககாரமென்றோசை கிரகிக்கப்படும், அப்போது செவி, இந்திரியம்; ஓசை பொருள்; அவற்றின்து சந்நிகர்ஷஞ் சமவாயமே; செவிக்கு வான்வடிவமுண்மையின், ஓசைக்கு வான்குணத்தன்மையுண்மையின் குணகுணிகட்குச் சமவாயமாதலின்.

எப்போது சமவேதசமவாய சந்நிகர்ஷம்? எப்போது செவியிற் சமவேதமான ஓசையில் ஓசைத்தன்மை முதலிய சாமாநியஞ் சுரோத்திரத்தாற் கவரப்படும், அப்போது செவி இந்திரியம்; ஓசைத்தன்மைமுதலிய சாமாநியம், பொருள்; அவற்றினது சந்நிகர்ஷஞ் சமவேதசமவாயம்; செவியிற் சமவேதமான ஓசையில், ஓசைத்தன்மைக்குச் சமவாயமாதலின்.

எப்போது விசேடண விசேடிய பாவப் பொருளிந்திரியச் சந்நிகர்ஷம்? எப்போது கண்ணோடுசையுத்தமான நிலத்திற் குடமில்லென்று குடமுதலியவற்றின்மை கிரகிக்கப்படும், அப்போது கண்ணோடு சையுத்தமான நிலத்திற்குக் குடமுதலியவற்றின்மை விசேடியம். குடமில்லது நிலமென்னுமிடத்துக் கண்ணோடு கூடிய நிலத்திற் குடமுதலியவற்றின்மை விசேடணம். எப்போது மநத்தோடு சையுத்தமான ஆன்மாவின் கண்ணிடத் தின்பமில்லையென்று சுகமுதலியவற்றின்மை கிரகிக்கப்படும், அப்போது மநத்தோடு சையுத்தமான ஆன்மாவுக்

தின்பமுதலியவற்றின்மை விசேடியம். இன்பமிலே னென்னுமிடத் தின்பமின்மை விசேடணம். எப் போது செவியிற் சமவேதமான ககாரத்திற் சகார த்தன்மையில்லென்று கிரகிக்கப்படும், அப்போது செவியிற் சமவேதமான ககாரத்திற்குச் சகாரத்த ன்மையின்மை விசேடியம். சகாரத்தன்மையில்ல து ககாரமென்புளிச் சுரோத்திரசமவேதமான க காரத்திற்குச் சகாரத்தன்மையின்மை விசேடண மாதலில்.

இங்ஙனஞ் சுருக்கத்தாற் கூறுதும். ஐவகைச் ச ம்பந்தத்தின் சம்பந்தியினது விசேடண விசேடிய பாவலக்கணமான பொருளிந்திரிய சந்நிகர்ஷத்தா ல், இன்மை கிரகிக்கப்படுமே. இங்ஙனம் சமவாய மும்; கண்ணோடு சையுத்தமான நூலிற்கு விசேடி யமான ஆடை சமவாயம். இந்நூல்களிலே ஆடை சமவாயமென்று கிரகிக்கப்படும். இங்ஙனம் அறு வகைச்சந்நிகர்ஷங் கூறப்பட்டன.

சங்கிரகமாகவுங் கூறுதும். இந்திரியத் தோற்ற ப்பிரமை, விகற்ப நிருவிகற்பமென இருபாற்று. ஆங்கதற்குக் கரண மூன்று சந்நிகர்ஷமாறு.

அற்றாயின், நிருவிகற்ப மெய்யாகிய தன் னிலக்க ணவிடயத்தன்மையாற் காட்சியாக, உரையு மிவி ங்கமும்போல அநுகதாகாரத்தை அகப்படுத்தலிற் சாமாகிய விடயமான சவிகற்பம், எங்ஙனங் கா ட்சி? பொருளிற்றோன்றியதற்கே காட்சித்தன்மை யாதலின், பொருளுமெய்ம்மையுண்டாயேபிறப்பிப்

மாதலின், தன்னிலக்கணம் பொய்ம்மையுண்டாயது சாமானியமன்று: பிரமாணத்தாற் றள்ளப்பட்ட உண்மையுடைய பிரதிபந்தகவிருவான அதற்குப் பொய்ம்மையுண்டாதலின்: இங்ஙனமன்று, சாமானியத்திற்கும் பொருளாந்தன்மை உண்மையின். இங்ஙனம் பிரத்தியட்சங் கூறப்பட்டது.

2. அநுமானம்.

இலிங்கபராமரிசம் அநுமானம். யாதினாலநுமானிக்கப்படுமது அநுமானம். இலிங்க பராமரிசத்தாலே பொருளநுமிக்கப்படும். ஆதலின் இலிங்கபராமரிசமநுமானம். அது புகைமுதலிய ஞானம்: அநுமிதியைக் குறித்துக் கரணமாதலின். தீமுதலிய ஞானமநுமிதி; அதன் கரணம் புகைமுதலியஞானம்.

இலிங்கம் யாது? அதனது பராமரிசம் யாது? கூறுதும். வியாத்திவலத்தாற் பொருளையுணர்த்துவது இலிங்கம். எங்ஙனம்? புகை தீக்கிலிங்கம். அங்ஙனமன்றே யாண்டுப்புகை ஆண்டுத்தீயென்னு முறை நிகழ்ச்சி நியமம் வியாத்தி. அது கிரகிக்கப்படுங்காலே புகை தீயையுணர்த்தும். ஆதலின் வியாத்திவலத்தாற் றீயநுமாபகமாதலிற் புகை தீக்கிலிங்கம், அதனது மூன்றாஞானம் இலிங்கபராமரிசம். அங்ஙனமன்றே முன்னே அட்டில் முதலியவற்றின் மறித்து மறித்தும் புகைகண்டு தீக்காணுகின்றான் அப்படிக்கண்டலாற் புகை தீக்களது தன்னியல்பான சம்பந்தம், யாண்டுப்புகை ஆண்டுத்தீயென்று துணியாநின்றான்

யாண்டு யாண்டு மித்திரைமகன்மை ஆண்டாண்
டுக் கருமையென்ப தொக்கும், ஆயினும், மித்திரை
மகன்மை கருமைகட்குத் தன்னியற்கைச் சம்பந்
தமின்று, மற்றென்னெனின் ஔபாதிகமே; அட
கு முதலிய உணவுப்பரிணாமமான உபாதியுண்மை
யின். அங்ஙனமன்றே, கருமையின் மித்திரைமக
ன்மை பிரயோசகமன்று, மற்றென்னெனின், அ
டகு முதலிய உணவுப் பரிணாம வேறுபாடே பிர
யோசகம். பிரயோசகமு முபாதியென்று கூறப்ப
டும். புகை தீக்களது சம்பந்தத்தில் ஓருபாதியுமி
ன்று; தகுதியல்லது சங்கிக்கப்பொருட் டருமை
யாதலின், தகுதியது காணப்படாமையின். யாண்
டொருபாதியுண்டு ஆண்டுக் காணப்படும். எங்ஙனம்? தீ
க்குப் புகையொடு சம்பந்தத்தில், ஈரவிறகின் கூட்
டமுபாதி; கொலைமைக் கதன்மசாதநத்தோடு கூ
டிய சம்பந்தத்தில் நிஷித்தத்வமுபாதி; மித்திரை
மகன்மைக்குக் கருமை சம்பந்தத்தில் அடகு முத
லிய உணவுப் பரிணாம வேறுபாடுபாதி. ஈண்டப்
புகைக்குத் தீயுடனிகழ்ச்சியில் ஓருபாதியுமின்று;
உண்டாயின், அப்போது நிலம்போலக் காணப்ப
டும். ஆதலிற் காட்சியின்மையி னில்லையென்னுந்
தருக்கத்துணையுடைய உணர்வின்மையோடு கூடி
ய காட்சியானே உபாதியின்மை துணியப்படும்.
அங்ஙனமன்றே உபாதியின்மையிற்றோன்றிய வா
சனையோடுகூடிய மறித்துக்காண்டலிற் றோன்றிய
வாசனையோடு கூடிய உடனிகழ்ச்சி கிரகிக்குங் கா
ட்சியானே புகை தீக்களது வியாத்தி துணியப்ப
டும். ஆதலின் புகை தீக்களுக்குத் தன்னியற்கைச்

சப்பந்தம்; ஔபாதிகமன்று. தன்னியற்கைச் சம்பந்தம் வியாத்தியென்று கூறப்படும்.

ஆதலின் இந்திரியத்தாற் புகை தீக்களது வியாத்தி கிரகிக்கப்படுகையின் அட்டிலிற் புகைஞானம் யாது? அது முதலது; மலைமுதலிய பக்கத்திற் புகைஞானம் யாது? அது இரண்டாவது. பிற்பாடு முன் கிரகிக்கப்பட்டதாகிய புகை தீக்களது வியாத்தியை நினைத்து, தம்மலையின்கண்ணே பின்னர்ப் புகையைப் பராமரிசிக்கின்றான், இம் மலையிற் றீயால் வியாத்தமான புகையுண்டென்று. இப் புகை ஞானமூன்றாவது. இஃதவசியம்வேண்டப்பட்டது. வேறாயின், யாண்டுப்புகை ஆண்டுத்தீயுண்டாக ஈண்டுத்தீயிருத்தலெங்ஙனம்? ஆதலி னீண்டுப் புகையுண்டென்னு ஞானம் வேண்டப்படும். இதுவே லிங்கபராமரிசம். அதுவும், அநுமிதியைக் குறித்தாக் கரணமாதலின், அநுமானம். அதனை யிம்மலையிற் றீயுண்டென்னு மநுமிதி ஞானந் தோன்றும்.

அற்றாயின், எங்ஙனம் முன்னரட்டிலிற் புகை ஞானம் யாததுதீ யநுமாபகமன்று. அஃதொக்கும்; வியாத்தி கிரகிக்கப்படாமையின், வியாத்தி கிரகிக்கப்படுகையிலே அநுமிதிதோன்றலின். ஆயின் வியாத்தி துணிந்தபின் பட்டியின்கண்ணே தீ யநுமிக்கப்படும்; இங்ஙனமன்று. தீயது காட்சியாயினமையின். ஐயப்படுபொருளநுமிக்கப்படும். எங்ஙனம் பாஷியகாரராற் கூறப்படும்? அநுபலக்கிப்பொருளிலும் துணிந்த பொருளிலு நியாயம் பிரவர்த்திக்காது; மற்றென்னெனில், ஐயப்படும் பொருளில். ஆயின்; மலையடைதன் மாத்

திரமாகிய மகற்குப் புகைஞாநந் தீயை யநுமிக்கப் பண்ணுதலென்? இவ்விடத் தையமுண்டன்றோ; சாதித்தல் வாதித்தலாகிய பிரமாணமின்மையால், ஐய நியாயத்தாலடைதலின்; அஃதொக்கும்; கிரகிக்கப்படாத வியாத்தியான் போலக் கிரகித்து மறந்த வியாத்தியுடைய மகற்கு மநுமாநம் பிறவாமையால், வியாத்திநினைவு மநுமிதி யேதுவாதலின். புகை காண்டலாலெழுந்த வாசனையுடையனாய் ஏதேது புகையது வதுதீயது,எங்ஙனம்,அட்டிலென்று வியாத்தியை நினைப்பான். ஆதலிற் புகைக்காட்சி தோன்றலின் வியாத்தி நினைவுதோன்றுகையின் இதுவும் புகையுடைத்தென்னும் புகைஞாநம் யாது, அதுமூன்றாவது. அதுவே தீயை யநுமிக்கப்பண்ணும், மற்றையவல்ல. அதுவே யிலிங்க பராமரிசம். ஆதலி னிலிங்க பராமரிச மநுமாநமென்னு மிது துணியப்படும்.

சுவார்த்தாநுமாநம்.

அவ்வநுமாநமுஞ் * சுவார்த்தமும் பரார்த்தமுமென இருவகைப்படும். சுவார்த்தந் தன்னுணர்வினேது. அங்ஙனமன்றோ, தானே யட்டின் முதலியவற்றின் விசிட்டமாகிய காட்சியாற் புகை தீக்களது வியாத்தியைக் கிரகித்து, மலையருகடைந் ததன்கட் டீயினையமுடையனாய், மலையி னிகழ்வதா யிடைவிடாதமூலத்ததாய் விண்ணுறிஞ்சும் புகை

* சுவார்த்தம்—தற்பொருட்டு.
பரார்த்தம்—பிறன்பொருட்டு.

சம்பந்தம்; ஔபாதிகமன்று. தன்னியற்கைச் சம்பந்தம் வியாத்தியென்று கூறப்படும்.

ஆதலின் இந்நியாயத்தாற் புகை தீக்களது வியாத்தி கிரகிக்கப்படுகையின் அட்டிலிற் புகைஞானம் யாது? அது முதலது; மலைமுதலிய பக்கத்திற் புகை ஞானம் யாது? அது இரண்டாவது. பிற்பாடு முன் கிரகிக்கப்பட்டதாகிய புகை தீக்களது வியாத்தியை நினைத்துத் தம்மலையின்கண்ணே பின்னர்ப் புகையைப் பராமரிசிக்கின்றான், இம் மலையிற் றீயால் வியாத்தமான புகையுண்டென்று. இப் புகை ஞானமூன்றாவது. இஃதவசியம்வேண்டப்பட்டது. வேறாயின், யாண்டுப்புகை ஆண்டுத்தீயுண்டாக ஈண்டுத்தீயிருத்தலெங்ஙனம்? ஆதலி னீண்டுப் புகையுண்டென்னு ஞானம் வேண்டப்படும். இதுவே லிங்கபராமரிசம். அதுவும், அநுமிதியைக் குறித்துக் கரணமாதலின், அநுமானம். அதனு லிம்மலையிற் றீயுண்டென்னு மநுமிதி ஞானந் தோன்றும்.

அற்றாயின், எங்ஙனம் முன்ன ரட்டிலிற் புகை ஞானம் யாததுதீ யநுமாபகமன்று. அஃதொக்கும்; வியாத்தி கிரகிக்கப்படாமையின், வியாத்தி கிரகிக்கப்படுகையிலே அநுமிதிதோன்றலின். ஆயின் வியாத்தி துணிந்தபின் பட்டிலின்கண்ணே தீயநுமிக்கப்படும்; இங்ஙனமன்று. தீயது காட்சியாணையமின்மையின். ஐயப்படுபொரு ளநுமிக்கப்படும். எங்ஙனம் பாஷியகாரராற் கூறப்படும்? அநுபலத்திப்பொருளிலும் துணிந்த பொருளிலு நியாயம் பிரவர்த்திக்காது; மற்றென்னெனில், ஐயப்படும் பொருளில். ஆயின்; மலையடைதன் மாக்

கிராமாதிய மகற்குப் புகைஞாநந் தீயை யநுமிக்கப் பண்ணுதலெதன்? இவ்விடத் தையமுண்டன்றே; சாதித்தல் வாதித்தலாகிய பிரமாணமின்மையால், ஐய விபரியயத்தாலடைதலின்; அஃதொக்கும்; கிரகிக்கப்படாத வியாத்தியான் போலக் கிரகித்து மறந்த வியாத்தியுடைய மகற்கு மநுமாநம் பிறவாமையால், வியாத்திநினைவு மநுமிதி யேதுவாதலின். புகை காண்டலாலெழுந்த வாசனையுடையனாய் ஏதேது புகையதுவது தீயது, எங்ஙனம், அட்டிலென்று வியாத்தியை நினைப்பான். ஆதலிற் புகைக்காட்சி தோன்றலின் வியாத்தி நினைவு தோன்றுகையின் இதுவும் புகையுடைத்தென்னும் புகைஞாநம் யாது, அது மூன்றாவது. அதுவே தீயை யநுமிக்கப்பண்ணும், மற்றையவல்ல. அதுவே யிலிங்க பராமரிசம். ஆதலி லிலிங்க பராமரிச மநுமாநமென்னு மிது துணியப்படும்.

சுவார்த்தாநுமாநம்.

அவ்வநுமாநமுஞ் * சுவார்த்தமும் பரார்த்தமுமென இருவகைப்படும். சுவார்த்தந் தன்னுணர்வினேது. அங்ஙனமன்றே, தானே யட்டின் முதலியவற்றின் விசிட்டமாகிய காட்சியாற் புகை தீக்களது வியாத்தியைக் கிரகித்து, மலையருகடைந் ததன்கட் டையமுடையனாய், மலையி னிகழ்வதா யிடைவிடாதமூலத்ததாய் விண்ணுறிஞ்சும் புகை

* சுவார்த்தம்—தற்பொருட்டு.
பரார்த்தம்—பிறன்பொருட்டு.

யொழுங்கைக் கண்டு, புகைகண்டவா லெழுந்த வாசனையுடையனாய், யாண்டுப்புகை ஆண்டுத்தீயென்று வியாத்தியை நினையாநின்றான், ஈண்டும் புகையுண்டென்றுணராநின்றான், ஆகலின் இம்மலையிற் றீயுண்டென்று தானே யுணராநின்றான். அதுவே சுவார்த்தாநுமானம்.

பரார்த்தாநுமானம்.

தான் புகையாற் றீயை யநுமித்துப் பரனைக்குறித்துப் போதிக்கும்பொருட்டுப் பஞ்சாவயவ அநுமான வாக்கியம் யாது கூறுகின்றான், அது பரார்த்தாநுமானம். அஃதெங்ஙனம்? மலை தீயுடைத்து; புகையுண்மையான்; யாது யாது புகையுடைத்தது வது தீயுடைத்து, எங்ஙனம், அட்டில்; இதுவு மங்ஙனம். ஆதலி லிங்ஙனம், என்பதே. இவ்வாக்கியத்தானே பிரதிபாதிக்கப்பட்ட பஞ்ச ரூபத்தோடு கூடிய அவ்விலிங்கத்தாற் பரனுந் தீயை யுணராநின்றான். ஆதலின் இது பரார்த்தாநுமானம்.

அந்நுவயவியதிரேகி

இதின், மலைக்குத் தீ யுண்மை சாத்தியம். புகையுண்மை யேது. அதுவும், அந்துவயவியதிரேகி; அந்துவயத்தானும் வியதிரேகத்தானும் வியாத்தி யுடைமையின். அங்ஙனமன்றே, "யாண்டுப் புகை, ஆண்டுத் தீ, எங்ஙனம், அட்டிலில்" என்பது அந்துவயவியாத்தி; அட்டிலிற் புகை தீக்களிருந்துவய உண்மையது காட்சியின்

இங்ஙனம், "யாண்டுத் தீயில்லை ஆண்டுப்புகையுமில்லை, எங்ஙனம், மடுவில்" என்பது வியதிரேக

வியாத்தி; மடுவிற் புகை நீக்களது வியதிரேக உ
ண்மையது காட்சியின்.

வியதிரேக வியாத்திக்குக் கிரமமிது; அந்நுவய வியாத்தியில் யாது வியாப்பியம், அத னின்மை யீண்டு வியாபகம், யாது வியாபகம், அத னின்மை ஈண்டு வியாப்பியமென்று, அங்ஙனங் கூறப்பட்டது. உண்மை வியாப்பியமும் வியாபகமும், இன்மைக்கு மாறு வரும். ஆதலி னிங்ஙனம் புகையுண்மை யேதுவி லந்நுவயத்தாலும் வியதிரேகத்தாலும் வியாத்தியுண்டு.

வாக்கியத்தில், அந்நுவயவியாத்தியொன்றே பிரதரிசிக்கப்பட்ட தேதது? அதொன்றாலும் பயனாதலின்; அவற்றுள்ளும், அந்நுவயஞ் செவ்விதாதலிற், பிரதரிசநஞ் செந்நெறியாற் சித்திக்கும் பொருட்குக் கோடுநெறியாற் சாதித்தல் யோகமாகாமையின்; வியதிரேக வியாத்தி யின்மையினன்று. ஆதலி னிங்ஙனம் புகை யுண்மையேதந்நுவய வியதிரேகியே. இங்ஙன மேலேயவும். அநித்தியத்துவ முதலிய சாதிக்கையிற் கிருதகத்துவமுதலியவதுக்களந்நுவயவியதிரேகிகளாக அறியத்தக்கன.

கேவலவியதிரேகி. ஒரோவொரேதுக் கேவலவியதிரேகி. அஃதெங்ஙனம்? சான்மகத்துவஞ் சாதிக்கையிற் பிராணாதியுடைமையேது; எங்ஙனம்? "சிவச் சரீரஞ் சான்மகம்; பிராணாதி யுடைமையின்: யாது சான்மகமன்றது பிராணாதி யுடைமைய தின்று, எங்ஙனம், குடம்; இச் சிவச் சரீர மங்ஙனமன்று; ஆதலினி

ங்ஙனமன்று" என்கை. இதிற் சிவச்சரீரத்தினது சான்மகத்துவஞ் சாத்தியம், பிராணாதி யுடைமையேது. இது கேவலவியதிரேகி; அந்துவய வியாத்தி யின்மையின். அங்ஙனமன்றோ, யாது பிராணாதியுடைய ததுசான்மகம், எங்ஙனம், இதுவென்று திட்டாந்தமில்லை. சர்வ சிவச் சரீரமும் பக்கமே.

இலக்கணமுங் கேவலவியதிரேகி யேது. எங்ஙனம்? பிருதிவி யிலக்கணங் கந்தமுடைமை. இவ்விவாதபதம்* பிருதிவி; கந்தமுடைமையின்: யாது பிருதிவியன்றது கந்தமுடையதன்று, எங்ஙனம்? புனல். இதில், யாது கந்தமுடையது, அது பிருதிவி, எங்ஙனம், இதுவென்றுதிட்டாந்தமில்லை.

பிரமாண இலக்கணமாகிய பிரமாகரணத்துவமுமவ்வாறே. அங்ஙனமன்றோ, காட்சி முதலியன பிரமாணமென்று வியவகரிக்கத்தக்கன; பிரமாகரணத்துவ மாதலின்: யாது பிரமாணமென்று வியவகரிக்கப்படாதது பிரமாகரண மன்று; எங்ஙனம்? காட்சிப்போலி முதலியன. இதில், யாது பிரமாகரணம், அது பிரமாணமென்று வியவகரிக்கத்தக்கது, எங்ஙனம்? இதுவென்று அந்துவய திட்டாந்தமில்லை; பிரமாணமாத்திரம் பக்கஞ்செய்தலின். இதில், வியவகாரஞ் சாத்தியம்; பிரமாணத்துவமன்று; அதற்குப் பிரமாகரணத்துவமாகிய ஏதுவினின்றும் வேறின்மையிற் சாத்திய அபேததோஷம் வருதலின். ஆதலி னிங்ஙனங் கேவல வியதிரேகிகள் காட்டப்பட்டன.

---

* பதம்—பொருள்.

வேறோரேதுக் கேவலாந்நுவயி.

கேவலாந்நுவயி. எங்ஙனம்? "விசேடமபிதேயம்; பிரமேயமாதலின்: யாது பிரமேயம், அஃதபிதேயம், எங்ஙனம், குடம்; இதுவு மங்ஙனம். ஆதலினிங்ஙனம்" என்கை. இதில், விசேடத்திற் கபிதேயத்துவஞ் சாத்தியம்; பிரமேயத்துவமேது. அதுவுங் கேவலாந்நுவயியே. யாதபிதேயமாகாதது பிரமேயமுமாகாது; எங்ஙனம், இதுவென்று வியதிரேக திட்டாந்தமில்லை. எவ்விடத்தும் பிராமாணிகப் பொருளே திட்டாந்தம். அதுவும் பிரமேயமு மபிதேயமும்.

பஞ்சரூபங்கள். இவ்வந்நுவய வியதிரேகி, கேவலாந்நுவயி, கேவலவியதிரேகி, யென்னு மேதுக்களது மத்தியில், எவ்வேது அந்நுவய வியதிரேகி, யது பஞ்சரூபத்தோடு கூடியே தனது சாத்தியத்தைச் சாதிக்க வல்லது; ஒரு ரூபத்தானுங் குறைந்ததாகாது.

அப் பஞ்சரூபங்கள், பக்கத் தருமத்வஞ், சபக்கத்திற் *சத்துவம், விபக்கத்தில் §வியாவிருத்தி, அவாதிதவிடயத்வம், †அசத் பிரதிபக்கமென்பனவாம். இப் பஞ்சரூபங்கள் புகையுடைமை முதலிய அந்நுவயவியதிரேகி யேதுக்களி னிருக்கும். புகையுடைமை பக்கமான மலைக்குத் தருமம், மலையினஃ திருத்தலின். இங்ஙனஞ் சபக்கத்தி னுண்மை—சபக்கமாகிய அட்டிலினிருக்குமென்பதுபொ

* சத்துவம்-உண்மை. § வியாவிருத்தி-நீக்கம்.
† அசத்-இன்மை.

ருள். இங்ஙனம் விபக்கமாகிய மடுவி னிக்கட்—ஆ ண்டில்லையுள்பது பொருள். இங்ஙனம் புகை யுடைமை யவாதிதவிடயம். அங்ஙனமன்றே புகையுடைமையாகிய ஏதுவுக்கு விடயஞ் சாத்திய தருமம். அது தீயுடைமை, யாது பிரமாணத்தானு மவாதிதம்—கண்டிக்கப்படாதென்பது பொருள். இங்ஙனம் புகையுடைமை பிரதிபக்கமில்லது. அங்ஙனமன்றே சாத்தியத்தின் விபரீத சாதக ஏத்வந்தரம் பிரதிபக்கமென்று கூறப்படும். அதுவும் புகையுடைமை யேதுவினின்றே; தோன்றுமையின். ஆதலி னிங்ஙனம் பஞ்ச ரூபங்கள் புகையுடைமை யேதுவிலிருக்கும். ஆதலி னிப் புகையுடைமை தீயுடைமையது கமகம். அது தீயுடைமையது சாதகம் என்பது பொருள்.

தீயினது பக்கத் தருமத்துவம், ஏதுவினது பக்கத் தருமத்துவவலியாற் சித்திக்கும். அங்ஙனமன்றே, அநுமானத்தின் சாமர்த்தியம் வியாத்தியும் பக்கத் தருமத்துவமுமென இரண்டு. அவற்றுள், வியாத்தியாற் சாமானிய சித்தி; ஏதுவினது பக்க தருமத்துவ வலியாற் சாத்தியத்திற்குப் பக்க சம்பந்தத்துவ விசேடஞ் சித்திக்கும். மலைத்தருமமாகிய புகையுடைமையாற் றீயும் மலைச்சம்பந்தமாயே யநுமிக்கப்படும். வேறாயிற் சாமானியம் வியாத்தி கிரகிப்பதானே சித்தித்தலின், அநுமானத்தாற் பயனென்னை?

வேறு மந்நுவயமியதிரேகி யேது யாதது பஞ்சரூபத்தோடு கூடியே நல்ல ஏதுவாம். வேறாயின், ஏதுப்போலி —ஏதுவல்லதென்னு மளவு

கேவலாந்நுவயி நான்கு ரூபத்தோடு கூடியே தனது சாத்தியத்தைச் சாதிக்கும். அதற்கு விபக்கத்தி னீக்கமின்று: விபக்கமின்மையின்.

கேவலவியதிரேகி நான்கு ரூபத்தோடு கூடியே. அதற்குச் சபக்கத்திலுண்மையின்று; சபக்க மின்மையின்.

பக்கம் சபக்கம் விபக்கம் யாவை? ௯-ஆவது

ஐயமுடைய சாத்திய தருமத்தையுடைய தருமி பக்கம். எங்ஙனம்? புகை அநுமானத்தின், மலை.

நிச்சித சாத்திய தருமத்தையுடைய தருமி சபக்கம். எங்ஙனம்? இப்புகையநுமானத்தின் கண்ணே, யட்டில்.

விபக்கம் நிச்சித சாத்திய மில்லாத தருமி. எங்ஙனம்? அண்டமடு. ஆதலின் இங்ஙனம் அந்நுவயவியதிரேகி, கேவலாந்நுவயி கேவலவியதிரேகி யாகிய மூன்றேதுவுங் காட்டப்பட்டன. அவற்றின் வேறுபட்டன ஏதுப்போலிகள்.

ஏதுப்போலி.

ஏது லக்கண ரகிதமாய் ஏதுவைப்போல விளங்குவன ஏதுப்போலிகள்; அவையும் அசித்தம், விருத்தம், அநைகாந்திகம், பிரகரணசமம், காலாத்திய யாபதிட்டம் என்னும் பேதத்தா லைவகையே.

அசித்தம். அவற்றுள் அகிச்சித பக்கவிருத்தி யசித்தம். அது ஆசிரயாசித்தம், சொரூபாசித்தம், வியாப்பியத்துவாசித்தமென மூன்று வகையே.

ஆசிரயாசித்த மெங்ஙனம்? வான்றாமரை மணமுடைத்து; தாமரைத்தன்மையால்; பொய்கைத்தாமரைபோல. இதில், வான்றாமரை யாசிரயம்; அஃதுமின்றே.

சொரூபாசித்த மெங்ஙனம்? சத்த மநித்தியம்; கட்புலப்படுதலால்; குடம்போல. இதிற் கட்புலப்படுதலேது. அதுவுஞ் சத்தத்திற் கின்றே; சத்தஞ் செவிப்புலப்படுதலின்

வியாப்பியத்துவாசித்தம் இருவகை; ஒன்று, வியாத்தி கிரகிப்பதாகிய பிரமாணமின்மையின், மற்றைய துபாதி யுண்மையின், வியாப்பியத்துவாசித்தம். அவற்றின், முதலதெங்ஙன்? யாது சத்து அது கணிகம், எங்ஙனம்? முகிற் படலம், சப்தாதியுஞ் சத்து. சோபாதி கதையாற் சத்துக்கு வியாப்பியத்துவாசித்தங் கூறில் வேறடைந்த கணிகத்துவம் வேண்டப்படும். இரண்டாவ தியாது? வேள்வியி னிகழுங் கொலை யதன்மசாதநம்; கொலைமையால்; வேள்விப்புறத்துக் கொலைபோல. இதின், அதன்மசாதநத்தின்கட் கொலைமை பிரயோசக மின்று. மற்றென்னை? நிஷித்தத்வமே பிரயோசகம் —உபாதியென்னு மளவு. அங்ஙனமன்றோ? சாத்திய வியாபகத்துவமாய்ச் சாதநத்திற் கவ்வியாபகத்துவமாதல் உபாதியென லுபாதி யிலக்கணம். அதுவும் நிஷித்தத்துவத்தின்க ணுண்டு. நிஷித்தத்வஞ் சாத்தியமான அதன்ம சாதநத்துவத்துக்கு வியாபகமே; எங்ஙனம்? யாண்டு யாண்டதன்ம சாதநத்துவம் ஆண் டாண் டவசிய நிஷித்தத்வ

ர். இங்ஙனஞ் சாதநமான கொலைமையை நிஷித்தத்வம் வியாபியாது: யாண்டு யாண்டு கொலைமை, ஆண்டாண் டவசிய நிஷித்தத்வ மின்று; வேள்வியி லாது பசுக்கொலையி னிஷித்தத்வ மின்மையின். அர்ப பிரயுக்தமான வியாத்தியோடு கூடிய கொலைமை வியாப்பியத்துவாசித்தமே.

விருத்தம். சாத்திய விபரீதத்தோடு வியாத்தம், விருத்தம். அஃதெங்ஙனம்? சத்த நித்தம்; காரியத்தன்மையால்: வானம்போல. காரியத்தன்மை சாத்தியமான நித்தியத்துவ ந்துக்கு விபரீதமான அநித்தியத்துவத்தோடு வியாத்தம். யாது காரியம் அஃது அநித்தியமே; நித்தியமன்று. ஆதலிற் காரியத்தன்மை விருத்தம்.

அநைகாந்திகம். வியபிசாரத்தோடுகூடிய தநைகாந்திகம். அஃது சாதாரண அநைகாந்திகம் அசாதாரண அநைகாந்திக மெனஇருவகைத்து. அவற்றுள் பக்கசபக்க விபக்கத்திலிருப்பது சாதாரண அநைகாந்திகம். எங்ஙனம்? சத்த நித்தியம்; பிரமேயத்தன்மையால்; வியோமம் போல. இதிற் பிரமேயத்தன்மையேது. அஃது நித்திய அநித்தியத்திருப்பது. சபக்க விபக்க நீக்க மியா த தசாதாரண அநைகாந்திகம். அஃதெங்ஙனம்? நிலநித்தம்; மணமுடைமையால்; வியோமம் போல. மணமுடைமை சபக்கமாகிய நித்தியத்துவகின்றும் விபக்கமாகிய அநித்தியத்துவகின்றும் நீக்கம்; நிலமாத்திரையி னிருத்தல்.

பிரகரணசமம். எவ்வேதுக்குச் சாத்திய விபரீதத்தைச் சாதிக்கு வேறொரேதுவுண்டதுவே பிரகரணசமம். எங்ஙனம்? "சத்த மநித்தியம்; நித்திய தரும மின்மையால். சத்த நித்தியம்; அநித்தியதருமந் தோன்றாமையால்" என்பதுபோல. இதுவே சத்பிரதிபக்கமென்றுங் கூறப்படும்.

காலாத்தியயாபதிட்டம். பிரமாணாந்தரத்தாற் றுணிந்த சாத்திய வின்மையேது வாதித விடயம். காலாத்தியயாபதிட்டமெனவுங் கூறப்படும். எங்ஙனம்? தீ வெம்மையிலது; பதார்த்தத்துவத்தால்; புனல்போல. இதில் பதார்த்தத்துவமான ஏதுவுக்குச் சாத்தியம் வெம்மையின்மை. அதன்மை காட்சியாலே துணியப்பட்டது, பரிசனக் காட்சியால் வெம்மை தோன்றலின். ஆதலி னிங்ஙன மறுபாடு உணர்த்தப்பட்டது.

3. உபமாநம்.

அதிதேச வாக்கியப் பொருணினைவோடு கூடிய ஆவொப்புமை விசிட்ட பிண்ட ஞானம் உபமானம். எங்ஙனம்? ஆமா வுணராதானும், எங்ஙனம் ஆ அங்ஙனம் ஆமா, என்றோர் ஆரணியக புருஷனாற் கேட்டு கானக்காட்டுக்கு வாக்கியப்பொருளை நினைத்துக் கொண்டு, எப்போது ஆவொப்புமை விசிட்டபிண்டங் காணுகின்றான், அப்போதவ் வாக்கியப் பொருணினைவோடு கூடிய ஆவொப்புமை விசிட்டபி

ண்ட ஞாகம் ரூபமாகும்; உபமிதியைக் குறித்துக் கரணமாதலின். அவ்வொப்புமை விசிட்ட பிண்டங் கண்டபின்னர், இது ஆமா சப்த வாச்சியமான பிண்டமென்னு நாமநாமி சம்பந்த *பிரதீதி யுபமிதி. அதுவே பலம். இங்ஙன முபமான முணர்த்தப்பட்டது.

4. சப்தம்.

ஆப்த வாக்கியம் சப்தம். ஆப்தன் உள்ள பொருளை யுபதேசிக்கும் புருஷன். வாக்கியம், அவாய்நிலை, யோக்கியதை, அண்மையுடைய பதங்களினது சமூகம். ஆதலினாலே "ஆபுரவி மகன் யானை" யென்னும் பதங்கள் வாக்கியமல்ல, ஒன்றற்கொன்றவாய்நிலை யின்மையின். "தீயானனைக்க" என்பது வாக்கியமன்று, யோக்கியதையின்மையின். தீ நனைத்தல்கட் கொன்றற்கொன்றங்வய யோக்கியதையின்றே. "தீயால்" என்னு மூன்றாவதால் "நனைத்தல்" ஆகிய காரியத்தைக் குறித்துக் கரணத்தன்மை தீக்குக் கூறப்பட்டது. தீ நனைத்தற் கரணமாம் பொருட்டு யோக்கியமன்று. ஆதலிற் காரிய காரண பாவ இலக்கண சம்பந்தத்திற் றீ நனைத்தல்கட்கு யோக்கியமின்மையிற் றீயானனைக்க என்பது வாக்கியமன்று. இங்ஙனம் ஒவ்வொரு யாமத்தின் ஒருங்குச்சரிக்கப்படாத "வெள்ளை—ஆவைக்—கோலாற்—கொணர்க" என்னும் பதங்கள் வாக்கியமல்ல, ஒன்றற்கொன்றங்வய யோக்கியதையுளதா

* பிரதீதி—அறிவு.

யினும், ஒன்றற்கொன் றவாய் நிலையுளதாயினும்
ஒன்றற்கொன் றண்மையின்மையின். யாவை அவா
ய்நிலையன, யோக்கியதையன, அண்மையன, அவை
பேவாக்கியம். எங்ஙனம்? 'ஜ்யோதிட்டோமத்தா
ற் சுறக்கம் வேண்டியான் வேட்க" என்பது முதலி
யன; "ஆற்றங் கரையிலிருந்து கனிக ளிருக்கின்றன";
"ஆவைக் கொணர்தி" என்பன முதலிய பதங்கடா
மே விளம்பமின்றி யுச்சரிக்கப்பட்டன.

அற்றாயின், இந்தப் பதங்க ளவாய்நிலையன அல்ல.
மற்றென்னெனிற் பொருள்கள்; கனி முதலிய ஆ
தேயங்கட்கே கரை முதலிய ஆதார அவாய்நிலைமை
யால்: ஆராயிற் பொருள்களும் அவாய்நிலையனவல்
ல; அவாய்நிலை இச்சை வடிவாய சேதந தருமமா
தலின்: அஃதொக்கும். பொருள்க டம்பதங்கள்
கேட்பானுக் கொன்றற்கொன்றா விடயமான அ
வாய்நிலையைத் தோற்றுவித்தலின். அவாய்நிலையன
வெனக் கூறப்படும். அதன் வழியா லதனைக் கூறு
ம் பதங்களு மவாய் நிலையனவென உபசரிக்கப்படு
ம். பதங்களே பொருளைப் பிரதிபாதித்துக்கொண்
டு பொருள் வேறுபாட்டு விடய அவாய்நிலையை
த் தோற்றுவிப்பனவென்று முபசாரத்தா லவாய்
நிலையன வென்றுமாம். இங்ஙனம் பொருள்க ளவா
ய்நிலையன; ஒன்றற்கொன் றந்வய யோக்கியமுடை
யனவுமாம். அதுவழியாற் பதங்களு மவாய் நிலைய
ன யோக்கியமுடையன வென் றுபசரிக்கப்படும்.
அண்மை பதங்க ளொருவனானே விளம்பமின்றி உ
ச்சரிக்கப்படுதல். அதுவுஞ் சாட்சாதே பதங்களினு
ண்டு; பொருள்வழியா னன்று. ஆதலின் இப்பொ

ருளுண்டாயிற்று. பொருள் கூறும் வழியாற் கேட்பானுக்குப் பதவேறுபாட்டு விடய அவாய்நிலையையாயினும் பொருள் வேறுபாட்டு விடய அவாய்நிலையையாயினுந் தோற்றுவிக்கின்ற, விளக்கும் ஒன்றற்கொன்றன்வயமான யோக்கியப்பொருளைக் கூறுகின்ற அண்மையுடைய பதங்களது கூட்டம் வாக்கியம்; பதமு மெழுத்துக்கூட்டம்* ஈண்டுக்கூட்ட மொருஞான விடயமாதல். இங்ஙனம் அதின் முறையுடையவாகிய எழுத்துக்கட்கு விரையக்கெடுதலுண்மையின் ஒருங்கே அநேக வெழுத் தநுபவமுண்டாகாமையின் முதன்முத லெழுத்துக்களை அநுபவித் தீற் றெழுத்துக் கேட்குங்கால் முதன்முதலெழுத் தநுபவத்தாற் பிறந்த வாசனையோடு கூடிய வீற்றெழுத்தோடு பொருந்திய பதத்திற்கமைந்த பொருட் சங்கேதங் கிரகித்தலால் அளிக்கப்பட்ட செவிப்புலனால் ஒருங்கே சகசத்தான பலவெழுத்தை யகப்படுக்கும் பதவுணர்வு தோன்றுந் துணைவலியால் பிரத்யபிஞாநம் போலப் பிரத்யபிஞாநக் காட்சியில் அதீதமாயு முன்னரவத்தை தோன்றுமே. அன்றே பின்னர் முதன்முதற் பதாநுபவத்தாற் றோன்றிய வாசனையோடு கூடிய பதப்பொருண் ஞானத்தால் அளிக்கப்பட்ட ஈற்றுப் பதவிடயச் செவிப்புலனாற் சதசத்தான பல பதத்தை அகப்படுக்கும் வாக்கியஞானமுண்டாம்.

* பதம் "எழுத்துக் கூட்டம்" என்றாரேனும் சிறுபான்மை ஓரெழுத்தே பதமாதலுமுளதென்றறிக.

இவ்வாக்கியம் ஆப்த பகனாற் கூறப்பட்டுச் சப்தப் பிரமாணமாம். அதற்குப் பலம் வாக்கியப் பொருளுணர்வு. இச் சத்தப் பிரமாண லக்கணம் உலகினும் வேதத்தினும் பொது. உலகத்தின் இது விசேடம். யாவனாயினு மொருவ னாத்தனாவான்; அனைவருமல்லர். ஆகலின் உலக வாக்கியஞ் சிறிதே பிரமாணம். ஆப்தனைக் கருத்தாவாகவுடைய வேதத்திற் பரமாப்தனாற் ஸ்ரீமகேசனாற் கூறப்பட்ட வாக்கியமெல்லாம் பிரமாணம்; எல்லாம் ஆப்தவாக்கியமாகலின்.

நான்கு பிரமாணமும் வர்ணிக்கப்பட்டன. இவற்றின் வேறாயின பிரமாணமல்ல; பிரமாணமாயினும் ஈண்டே யடங்குதலின்.

அருத்தாபத்தி.

அற்றாயின், அருத்தாபத்தியும் வேறு பிரமாணமாகவன்றி, அங்ஙனமன்றோ, பரியனான தேவதத்தன் பகலுண்ணானென்று கண்டாயினுங் கேட்டாயினு மிரவுண்டல் கற்பிக்கப்படும். பகலுண்ணானது பருமை யிரவுண்டலன்றிக் கூடாது, ஆகலின் பருமை வேறொன்றா லாகாமை தோற்றுவித்த அருத்தாபத்தியே இரவுண்டலிற் பிரமாணம், அது காட்சி முதலியவற்றின் வேறு, இரவுண்டல் காட்சி முதலியவற்றிற்கு விடயமாகாமையின்: இங்ஙனமன்று: இரவுண்டல் அநுமானவிடயமாகலின். அங்ஙனமன்றோ, தேவதத்தன் இரவிலுண்பன், பகலு

ன்றுனாயினும் பரியனாதலின், யாவனொருவனிர விலுண்ணானவன் பகலுமுண்ணானையும் பரியனாகான், எங்ஙன்? பகலிரவிலுமுண்ணான் பரியனாகான்; இவன் அங்ஙனமல்லன், ஆதலின அங்ஙனமல்லன், என்னுங் கேவலவியதிரேகி அநுமானத்தால் இரவுண்டலென்றலின், அருத்தாபத்தி கற்பனையாற் பயனென்?

அபாவம்.

அற்றாயின், அபாவமெனபதும் வேறு பிரமாணமாயுண்டு; அதுவும், இன்மை கவர்தற்பொருட்டு வேண்டப்படும், அங்ஙனமன்றோ, குடமுதலியவற்றி னநுபலத்தியாற் குடமுதலியவற்றி னபாவந் துணியப்படும். (அநுபலத்தி உபலத்தியின்மையெ ன்றது) அபாவப் பிரமாணத்தாற் குடமுதலியவற் றின்மை கிரகிக்கப்படும்: இங்ஙன மன்று; ஈண் டுக் குடமுண்டாயின், அப்போது நிலம்போலக்கா ணப்படும்; குடங் காணப்படாதிருப்பதே, அதனாற் காட்சியின்மையி னில்லையென்னுந் தருக்கத்து ணையுடைய தோன்றாமையோடு கூடிய காட்சியா னே, அபாவங் கிரகிக்கப்படுதலின்.

அற்றாயின், இந்திரியங்க டம்மோடு சம்பந்தப் பொருள் கிரகிப்பன—அங்ஙனமன்றோ; இந்திரி யங்கள் வஸ்துவை யடைந்து விளக்கும். ஞாநகர ணமாதலின்; ஆலோகம் போல—இங்ஙனமாயினு ங் கண் செவிகள் வஸ்துவை அடைந்து விளக்கு ம்; புறவிந்திரியமாதலின்; மெய் முதலிய போல— மெய் முதலிய அடைந்து காரியப்படுதல் உபயவா

திசித்தமே—இந்திரிய அபாவங்கட்குச் சம்பந்தமேயில்லை, சம்பந்தங்கள் சையோக சமவாயமேயன்றோ? அவை, அவற்றிற்கில்லை; விசேடண விசேடிய பாவஞ் சம்பந்தமேயன்று; வேறுதல், இருபொருட்கணிற்றல், ஒன்றுதலின்மையின்—சம்பந்தஞ் சம்பந்திகளில் வேறுதலும் உபய சம்பந்திகளிலடைதலு மொன்றுதலு முடையதன்றோ? எங்ஙனம்? முரசு குணிற் சையோகம்—அது முரசு குணில்களில் வேறுதலு மவற்றை யடைதலு மொன்றுதலுமாம்—விசேட ண விசேடிய பாவ மங்ஙனமன்று; அங்ஙனமன்றோ, தண்ட புருடனுடைய விசேடண விசேடிய பாவம் அவற்றின் வேறன்று; தண்டத்திற்கு விசேடணத்துவம் வேறு பொருளன்று; மற்றென்னெனிற் சொரூபமே—அபாவமும் விசேடணமாதலின் திரவியமுதலியவற்றின் வேறான ஒருபொருள் அபாவத்திற் சம்பவமாகாது—ஆதலின் அபாவத்திற்குத் தன்னை யுடையதென்னும் புத்தியைத் தோற்றுவிப்பதான சொரூபம் யாததுவே விசேடணத்துவம்; அது வேறுபொருளன்று—இங்ஙனம், வியாபகத்துவ காரணத்துவ முதலியவு மூகிக்கத்தக்கன—தன்னோடு கூடியதென்னும் புத்தியைத் தோற்றுவிப்பதான சொரூபம் யாதது நீ முதலியவற்றிற்கு வியாபகத்துவம்; நூன் முதலியவற்றிற்குக் காரணத்துவமுங் காரியத்தாற் றொடரப்பட்ட அந்நுவயவியதிரேகி சொரூபமே; வேறு பொருளன்று; அபாவமும் வியாபகமாதலின் காரணமுமாதலின்—அபாவத்திற் சாமானிய முதலியன சம்பவமாகா—இங்ஙனம் விசேடண

விசேடிய பாவம் விசேடண விசேடிய ரூபத்தினி ன்று வேறன்று; இருபொருட்க ணிற்பதுமன்று; விசேடணத்தில் விசேடண பாவமாத்திர முண்மை யின், விசேடியபாவ மின்மையின்—விசேடியத்தி லும் விசேடிய பாவமாத்திர முண்மையின், விசே டணபாவ மின்மையின். ஒன்றுமன்று; விசேடண த்தினது பாவமும் விசேடியத்தினது பாவமுமென உம்மைத் தொகை யீற்றினின்ற பாவமென்னுஞ் சொல் வேறு வேறு புணரும்—இவை இரண்டு, ச ம்பந்தம் ஒன்று; ஆதலின் விசேடண விசேடியபா வஞ் சம்பந்தமன்று—இங்ஙனம் வியாப்பிய வியா பக பாவ முதலியவும்—சம்பந்தம் என்னுஞ்சொற் பிரயோக மிரண்டாற் கூறப்படுதல் ஒப்புமையால், உபசாரமாதலின்—ஆதலின் சம்பந்தமில்லாத அ பாவத்திற் கிந்திரியத்தாற் கிரகித்தலுண்டாகாது: அஃதொக்கும்; வியாத்தி பாவத்தோடு கூடியதா தலின். பாவத்தை விளக்கு மிந்திரிய மடைந்தேவி ளக்கும்; அபாவமன்று. பாவத்தை விளக்கு மிந்தி ரியம் விசேடண விசேடிய முகத்தானே யென்பது சித்தாந்தம். சம்பந்தமில்லாத அபாவங் கிரகித்தலி ல் அதிப் பிரசங்க தோஷம் விசேடணத்துவத்தா னே விலக்கப்படும். பரமதத்தினு மொக்கும்.

பிராமாண்யம்.

இஃ திப்போது கூறப்படும்—புனன் முதலியிஞா னந் தோன்றுகையில் அந்த ஞானத்தினது பிராமா ண்யந் துணிந்தொருவன் புனன் முதலியவற்றிற்

செல்லாநின்றான்; ஒருவன் ஐயத்தானே சென்றான், சென்ற பிற்காலத்துப் புனல் முதலியவற்றை யடைந்தபோது பிராமாண்யந் துணிகின்றான்—இது வஸ்து கதி. இதில் ஒருவன் கூறினான்: முன்னரே பிராமாண்யந் துணிந்து மகன் செல்கின்றான்; தன்னாலே பிராமாண்யந் துணியப்படுதலின். இதன் பொருள்: எதனானே ஞானங் கிரகிக்கப்படும், அதனானே யதனையடைந்த பிராமாண்யமும்; ஞானதருமமாகிய பிராமாண்யங் கிரகிப்பது ஞானங் கிரகிப்பதின் வேறன்று. ஆதலின் ஞானத்தை யடைந்த பிராமாண்யத்திற்குத் தன்னாற் றுணிதல் ஞானங் கிரகிப்பதின் வேறு வேண்டாமையே. ஞானமுஞ் செல்வதற்கு முன்னமே கிரகிக்கப்படும். வேறாயின், பிராமாண்ய அப்பிராமாண்ய ஐயமும் எங்ஙனமுண்டாம்? ஆதலின் செல்வதற்கு முன்னமே ஞானத்தை வேறொன்றாத் தோன்றாமை தோற்றுவித்த அருத்தாபத்தியால ஞானங் கிரகிக்கப்படுகையில், ஞானத்தையடைந்த பிராமாண்யமும் அருத்தாபத்தியானே கிரகிக்கப்படும். பின்னர்ப் புருடன் செலவன். முதல் ஞானமாத்திரம் கிரகிக்கப்படும். பின்பு, சென்றதற்குப் பின் பலங் காண்டலால் ஞானத்திற்குப் பிராமாண்யந் துணியப்படும் என்பதன்று இதிற் கூறுதும். ஞானத்வம் வேறொன்றாய்த் தோன்றாமை தோற்றுவித்த அருத்தாபத்தியால் ஞானங் கிரகிக்கப்படுமென் றியாது கூறப்படும், அதுவே யுட்பாட்டதன்று. அதனாற் பிராமாண்யங் கிரகித்தல் சேய்மைக்கண்ணே நீங்கும். அங்ஙனமன்றே, பரனுடைய அபிமதமிதன்றே? குட முதலிய விடய

ஞானந் தோன்றுழி யென்று மறியப்பட்ட திக்கு டமென்று குடத்திற்கு ஞாதத்துவந் துணியப்படும். ஆதலின் ஞானமுண்டாகையில் ஞாததையென்னொரு தருமம் பிறக்குமென் றநுமிக்கப்படும். அதுவும் ஞானத்திற்கு முன் பிறவாமையின், ஞானம் பிறக்கையிற் பிறத்தலின, அந்நுவயவியதிரேகங்களால் ஞானத்தாற் பிறக்குமென்று துணியப்படும். இங்ஙனம் ஞானத்திற் பிறந்த இந்ஞாததையென்பதொரு தருமமுண்டு. அதுவும் ஞானமல்லாமற் பொருந்தாது; காரணமன்றிக் காரியந் தோன்றாமையின். ஆதலின் அருத்தாபத்தியா லதன் காரண ஞானம் ஞாததையாற் றுணியப்படுமெனின் இது கூடாது; ஞானவிடயதை இதின் வேறான ஞாததையிற் பிரமாணமின்மையின்.

அற்றாயின் ஞானத்திற் பிறந்த ஞாததை யாதாரத்துவமேயன்றோ. குட முதலியவற்றிற்கு ஞானவிடயத்துவம் அங்ஙனமன்றோ தாதாத்மியத்தால் விடயதையில்லை; குடஞானங்கட்குத் தாதாத்மியமின்மையின் — அதனிற் றோன்றலால் விடயத்துவங் கூறில் இந்திரியங்கட்கு விடயத்துவம் வரும்; இந்திரியங்களாலும் அந்த ஞானந் தோன்றுதலின். — ஆதலின் இது யூகிக்கப்படும். ஞானத்தாற் குடத்திலொன்று பிறப்பிக்கப்படும். எதனாற் குடமே யந்த ஞானத்திற்கு விடயமாம்; வேறன்றென்று — ஆதலின் விடயத்துவம் வேறொன்றாய்த் தோன்றுமையானே ஞாததை யறியப்படும் — காட்சி மாத்திரையானேயன்று: இங்ஙனமன்று; இயற்கையானே விடயத்துவங் கூறிதலின். பொருள்ஞானங்க

டித்தன்மையவ்வியற்கை விசேடம் எதனால்
அவற்றிற்கு விடயவிடயி பாவம் வேருயின் இ
றப்பெதிர்வுகட்கு விடயத்துவ மின்ருதல் வே
ண்டும. அவற்றில் ஞாநத்தால் ஞாதநை தோன்று
தல் கூடாமையின் இல்லாத தருமியின் றருமந்
தோன்றுதல் பொருந்தாமையின் இன்னும் ஞாத
நையும் ஞாநவிடயமாகலின். அதன் கண்ணும் வே
று ஞாதநை விரல்வேண்டும். அங்ஙனமாயின் அ
நவத்தை. ஆயின் வேறு ஞாதநை யின்றியும் இய
ற்கையானே ஞாதநைக்கு விடயத்துவமென்னிற்
குடமுதலியவற்று ஞாதநையாலென ஞாதநையு
ண்டாகும். ஆயினும் அதனானே ஞாநமறியப்படும்.
பிராமாண்யம் கிரகிக்கப்படாது. பிரமாண ஞாந
நீங்காத ஞாதநை விசேடத்தால் பிராமாண்யங்
கிரகிக்கப்படும். பிராமாண்யத்திற்கு ஞாநங் கிரகி
ப்பதானே கிரகிக்கப்படுதல் யாண்டையது? ஆயி
ன் பிரமாண ஞாந நீங்காத ஒரு ஞாதநை விசேட
த்தால் ஞாநப் பிராமாண்யங்கள் கூடவே கிரகிக்க
ப்படும்.

இங்ஙனமாயின் அப்பிராமாண்யத்திலும் இது
கூறலாம். அப் பிரமாண ஞாநநீங்காத ஒரு ஞாத
நைவிசேடத்தால் ஞாந அப் பிராமாண்யங்கள் கூ
டவே கவரப்படுமென்று. அப் பிராமாண்யமுந் த
ன்னனே கவரப்படும். இங்ஙனமாயினும் அப்பி
ராமாண்யம் பிறிதானே பிராமாண்யமும் பிறிதா
னே கிரகிக்கப்படும். ஞாநங் கிரகித்தலின் வேறெ
ன்பதிதன் பொருள். ஞாந மாநந்தக் காட்சியானே
கிரகிக்கப்படும்; பிராமாண்யம் அநுமாநத்தால்,

அங்ஙனமன்றேல் புனன் ஞானத்திற்குப் பின் புனல் வேண்டியானது செலவிருவகை, பலமுடையதும் பலமில்லதுமென. அவற்றுள் யாது பயனோடுகூடிய தது பலமுடைச் செலவு. அதனால் ஞானத்திற்கு மெய்ம்மை யநுமிக்கப்படும். பிரயோகமும்: 'விவாதத்தாற் றழுவப்பட்ட புனன் ஞானம் பிரமாணம்; பயனுடைச்செலவு தோற்றுவிக்கலான். யாதுபிரமாண மன்றது பயனுடைச் செலவைத்தோற்றுவியாது; எங்ஙனம்? பிரமாணப் போலி. இது கேவலவ்யதிரேகி. இதிற் பயனுடைச் செலவைத் தோற்றுவிப்பதான புனன் ஞானம் யாது அது பக்கம். அதனது பிராமாண்யம் சாத்தியம்; மெய்ம்மையதாமென்று பொருள். பிரமாகரணத்துவான்று; கிளைவால் வியபிசாரம் வருதலின். எது சமர்த்தப்பிரவிருத்தி சநகம்.—பயனுடைச் செலவைத் தோற்றுவித்த லென்னு மளவு. இக்கேவலவியதிரேகி யநுமானத்தா லப்பியாச தசையி லுண்டான ஞானத்திற்குப் பிராமாண்யந் துணிகையில் அது திட்டாந்தமாகச் செலவுக்கு முன்னருந் தன் சாதீயத்துவத்தால் அந்வயவியதிரேகி யநுமானத்தாற் பயின் றறியாத ஞானத்தினது பிராமாண்யமநுமிக்கப்படும். ஆதலிற் பிறிதானே பிராமாண்யம். ஞானங் கிரகிப்பதானே, கிரகிக்கப்படுவதன்று. பிரமாணங்கள் கூறினாம். பிரமேயங்கள் கூறுதும்.

பிரமாண முற்றும்.

௨, பிரமேயம்.

ஆன்மா, சரீரம், இந்திரியம், அருத்தம், புத்தி, மனம், பிரவிருத்தி, தோடம், பிரேத்தியபாவம், பலம், துக்கம், அபவருக்கம், பிரமேயம் என்பது சூத்திரம்.

1. ஆன்மா.

அவற்றுள் ஆன்மத்துவசாமானியவான் ஆன்மா. அவனுந் தேகேந்திரியங்களின் வேறாயினான், சரீரந்தோறும் பின்னமாயினான்; விபு; நித்தியன்; அவனு மானதக் காட்சியான். விபாகத்திற் புத்தியாதி குணவிசேடங்களுடையன், அங்ஙனமன்றோ, புத்தியாதிகள் குணங்கள்; அநித்தியமாய்க் கொண்டோ ரிந்திரியத்தாற் கிரகிக்கப்படுதலால்; ரூபம் போல. குணமுள குணியைப் பற்றியதே. அவற்றுள், புத்தியாதிகள் பூதங்கட்குக் குணமல்ல; மானதக் காட்சித் தன்மையால். யாவை பூதங்கட்குக் குணங்கள் அவை மனத்தாற் கிரகிக்கப்படா. எங்ஙனம்? உருவாதி. திக்குக் காலமனங்களுக்குக் குணங்களல்ல; விசேடகுணமாதலின். யாவை திக்காதிகுணங்கள், அவை விசேடகுணமல்ல; எங்ஙனம்? சங்கியை முதலிய. அவை யெல்லாப் பொருள்கட்கும் பொதுக்குணங்கள். புத்தியாதிகள் விசேடகுணங்களே; குணமாய்க் கொண்டோ ரிந்திரியத்தாற் கவரப்படுதலின், உருவம் போல. ஆதலிற் றிக்காதிகளுக்குக் குணங்களல்ல. ஆதலின் இவ்வெட்டுத் திரவியங்களினின்றும் வேறாய்ப் புத்தியாதிகட்குக் குணி வேண்டத் தக்கது. அதுவே

யான்மா. பிரயோகமும்: புத்தியாதிகள், பிருதிவியாதி யஷ்ட திரவியங்களின் வேறான திரவியத்தைப் பற்றுவன; பிருதிவியாதி யஷ்ட திரவியங்களைப் பற்றாமலுள்ள குணமாதலின். யாது பிருதிவியாதி யஷ்ட திரவியங்களின் வேறாய திரவியத்தைப் பற்றாதது, பிருதிவியாதி யஷ்ட திரவியங்களைப் பற்றாமற் குணமன்று. என்னைப? உருவாதி. இது கேவலவியதிரேகி. அந்துவயவியதிரேகியாலும் விளக்குப. எங்ஙனம்? புத்தியாதிகள் பிருதிவியாதி யஷ்ட திரவியங்களின் வேறான பொருளைப் பற்றுவன; பிருதிவியாதிகளைப் பற்றாமற் குணமாதலின். யாது எதைப்பற்றாமற் குணம், அது அதின் வேறாயதைப்பற்றுவதாம். எங்ஙனம்? பிருதிவியாதியைப் பற்றா ஒலி பிருதிவியாதிக்கு வேறான வானைப்பற்றியதென்று. ஆதலின், இங்ஙனம், பிருதிவியாதி யஷ்டதிரவியங்களின் வேறாயொன்பதாம்பொருளான ஆன்மாச் சித்திக்கும். அவனும் யாண்டுங் காரியந் தோன்றுதலின், விபு-பரமமகற் பரிமாணவானென்று பொருள். விபுத்துவத்தால் அவற்கு நித்திய அநுமானம்; வியோமம் போல. சுகமுதலிய வேறுபாட்டா லுடம்புகடோறும் வேறுபாடுடையான்.

2. சரீரம்

அவனுக்குப் போக நிலம் உடம்பு. இன்ப துன்ப அநுபவம் போகம். அது எதனோடு கூடிய ஆன்மாவிற் றோன்றும் அது போக நிலம்; அதுவே சரீரம். சேட்டாசிரயமுடம்பெனினுமாம். சேட்டை, இதமகிதமடைதற் பரிகரித்தற்பொருட்டுப் புடை

பெயர்தல்.—புடைபெயர்தன் மாத்திரையன்று.

3. இந்திரியம்

உடம்போடு சையுத்தமாய ஞானகரணமான அதீந்திரிய மிந்திரியம். "அதீந்திரிய மிந்திரியம்" என்று கூறிற் காலாதியினு மிந்திரியத்துவம்வரல்வேண்டும். ஆதலின் "ஞானகரணமான" என்று கூறப்பட்டது. அங்ஙனமாயினும், பொருளிந்திரிய சந்நிகர்ஷ முதலியவற்றினும், இந்திரியத்துவம் வரல்வேண்டும். ஆதலின் "உடம்போடு சையுத்தமாய" என்று கூறப்பட்டது. "உடம்போடு சையுத்தமாய ஞானகரணம்" என்று கூறில், ஆலோகத்தினும் இந்திரியத்துவம் வரல்வேண்டும். ஆதலின் "அதீந்திரியம்" என்று கூறப்பட்டது.

அவ்விந்திரியங்களும் ஆறு; க்கிராணம், இரசநம், சட்சு, துவக்கு, சுரோத்திரம், மனம் என்பனவே. அவற்றுள் கந்தந்தோன்றுதற் சாதக இந்திரியங் கிராணம்; மூக்கு நுனியினிருப்பது. அதுவும் பிருதிவிமயம். கந்தமுடைமையின்; கந்தமுடைமையுங் கந்தங் கவர்வதால். எவ்விந்திரியம், உருவாதியைந்தினுள் எக்குணத்தைக் கவரும், அவ்விந்திரியம் அக்குணத்தோடு கூடியது. எங்ஙனம், சட்சு ரூபங் கவர்வது; உருவத்தையுடையது; அதுபோலக் கிராணங் கந்தத்தைக் கவர்வது மதனாற் கந்தத்தையுடையதுமாம். இரசந் தோற்ற சாதக இந்திரியமிரசநம்; நா நுனியிருப்பது; அதுவு மப்புமயம்: ருபாதி யைந்தினு ளிரதத்துக்கே யபிவியஞ்சகமாதலில்; வாய்நீர் போல. ரூபந் தோற்ற சாதக இந்தி

ரியஞ் சட்சு; கண்மணி நுனியி னிருப்பது; அதுவுந் தேயுமயம். ரூபாதி யைந்தினுள் ரூபத்திற்கே யபிவியஞ்சகமாதலில்; விளக்குப் போல. பரிசத் தோற்ற சாதக இந்திரியந் துவக்கு; உடம்பெலாம் வியாபி. அதுவும் வாயுமயம்; ரூபாதி யைந்தினுட் பரிசத்திற்கே யபிவியஞ்சகமாதலின்; சரீர வியர்வத் தண்மை யபிவிஞ்சகமான விசிறிக் காற்றுப் போல. சத்தத் தோற்ற சாதக இந்திரியஞ் சோத்திரம். அது செவியோடு கூடிய ஆகாயமே. வேறு பொருளன்று; சத்த குணத்துவத்தால். அதுவுஞ் சத்தங் கிரகித்தலின். எவ்விந்திரியம் ரூபாதியைந்தினுள், எக்குணத்தைக் கவர்வது, அது, அக்குணத்தோடு கூடியது. எங்ஙனம்? சட்சு முதலியவைகள், சத்தங் கிரகிப்பது சுரோத்திரம் ஆதலின், அது சத்தகுணமுடையது. அற்றாயின், சட்சுமுதலிய இந்திரிய முண்மையின் யாது பிரமாணம்? கூறுதும்; அநுமானம். ரூபாதி ஞானங்கள், காரணசாத்தியங்கள்; கிரியையாதலின்; துணித்தற் கிரியை போல.

4. அருத்தம்.

அருத்தங்கள், ஆறு பதார்த்தங்கள்: அவை திரவியம், குணம், கருமம், சாமானியம், விசேடம், சமவாயமென்பனவே.

பிரமாண முதலியன ஈண்டே யடங்குவனவாயினும் பயன்படல்வகைத்தாற் பேதமாகக்கூறப்பட்டன.

திரவியம்.

அவயவத்தின் சமவாயிகாரணந் திரவியம்.

அத்திரவியங்களும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா, மநம், என ஒன்பதே.

பிருதிவி அவற்றுட் பிருதிவித்துவசாமானியமுடையது பிருதிவி. வன்மை, மென்மை முதலிய அவயவ சையோக விசேடத்தோடு கூடியது; இராணம், உடம்பு, மட்பிண்டம், கல், மரமுதலிய உருவமுடையது. கந்தம், ரூபம், இரதம், பரிசம், சங்கியை, பரிமாணம், வேறுதல், கூடல், பிரிதல், அண்மை, சேய்மை, குருத்துவம், திரவத்துவம், சம்ஸ்காரமுடையது. அதுவும் நித்த அநித்த பேதத்தால் இருவகை; பரமாணு ரூபம் நித்தியம்; காரிய ரூபம், அநித்தியம். "பிருதிவியினுடைய ரூப ரச கந்த பரிசங்கள் அநித்தியங்கள், பாகத்தாற் றோன்றியன; பாகந் தேயு சையோகம் ஆதலிற் பிருதிவியினது முன்னர் ரூப முதலியன கெடும் மற்றையன பிறக்குமென்பது பாகத்தாற்றோன்றுவன.

அப்பு அப்புத்தன்மைச் சாமானியமோடு கூடியதப்பு. இரசந இந்திரியம், ஆறு, கடல், பனி, ஆலி முதலிய உருவமுடையது; கந்தமின்றிச் சிநேகமோடு கூடிய முன்சொன்ன குணமுடையது; நித்த அநித்தமுமாம். நித்தம் பரமாணு ரூபம், அநித்தங் காரிய ரூபம். நித்தியங்களுடைய ரூபாதி நித்தியங்கள்.

தேயு தேயுத்தன்மைச் சாமானியமுடையது தேயு. சட்சு, ஞாயிறு, பொன், தீ, மின் முதலிய வேறுபாடுடையது. ரூபம், பரிசம், சங்கி

யை, பரிமாணம், பிரதக்த்வம், சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், திரவத்துவம், சம்ஸ்காரமுடையது. நித்த அநித்தமும், முன்போல. அது உற்பூத ரூப பரிசம், அநுற்பூத ரூப பரிசம், அநுற்பூத ரூப உற்பூத பரிசம், உற்பூத ரூப அநுற்பூத பரிசமென்று நால்வகை.

உற்பூதரூப பரிசம் எங்ஙனம்? பிண்டத் தேயுவான தீ முதலியன உற்பூத அபிபூத ரூப பரிசம். அநுற்பூத ரூபமென்னிற் கட்புலப்படாமை வேண்டும்; அநுற்பூதபரிசமென்னிற் பரிசத்தாற் கிரகிக்கப்படாமை வேண்டும். அபிபவம் வலியதாகிய தன் சாதியான பிறதிவி சம்பந்தப் பரிசத்தாற் பண்ணப்படுமே. அநுற்பூத ரூப பரிசத் தேயு எங்ஙனம்? சட்சிந்திரியம். அநுற்பூத ரூப உற்பூத பரிசம் எங்ஙனம்? வெந்நீரிற் றேயு. உற்பூத ரூப அநுற்பூத பரிசம் எங்ஙனம்? விளக்கொளி மண்டலம்.

வாயு

வாயுத்துவசம்பந்தமுடையது வாயு. துவக்கிந்திரியம், பிராணன், காற்று முதலியபேதமுடையது; பரிசம், சங்கியை, பரிமாணம், பிரதக்த்துவம், சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், விரைவுடையது. அதுவும் பரிசத்தால் அநுமேயம். அங்ஙனமன்றோ, வாயு வீசுகையில் வெம்மை தண்மையில்லாத பரிசம் யாதொன்று தோன்றுகின்றது. அது குணமாதலிற் குணியை அநுமானிக்கும். குணியும் வாயுவே; பிருதிவி தேயு வன்றாமையின். பிருதிவி வாயுவல்லதற்கு வெம்மை தண்மையில்லாத பரிசமின்மையின். அதுவும் நித்த அநித்தபேதத்தால் இருவகை. நித்தியம் பரமாணு

ரூப வாயு; அநித்தியங் காரிய ரூப வாயு.

தோற்றமும் அழிவும்

அவற்றாட் காரியமான பிருதிவியாதி நான்கிற்கு முற்பத்தி நாச முறைமையை கூறுதும். இரண்டு பரமாணுக்களது வினையாற் சையோகமுண்டாகையிற் றுவியணுகந் தோன்றும். அதற்குப் பரமாணுக்கள் சமவாயிகாரணம்; அவற்றது சையோக மசமவாயி காரணம்; அதிட்டாதி நிமித்தகாரணம். துவியணு கங்களது வினையாற் சையோகமுண்டாகையிற் றிரியணுகந் தோன்றும். அதற்குத் துவியணுகங்கள் சமவாயிகாரணம்; ஒழிந்தன முன்போல. இங்ஙனந் திரியணுகங்களாற் சதுரணுகம், சதுரணுக ங்களா லபரதூலம், அவற்றாற் றூலதரம், தூலதர ங்களாற் றூலதமம். இங்ஙன முறையான மகாப்பி ருதிவி, மகா அப்பு, மகா தேயு, மகா வாயு தோன் றும். காரியத்தை யடைந்த ரூபாதிகள் தங்கட் கிடமான சமவாயிகாரணத்தை யடைந்த ரூபாதிக ளாற் றோன்றும்; காரண குணங்கள் காரியகுணங் களைத் தோற்றுவிக்குமென்னு நியாயத்தால். இங் ஙனந் தோன்றிய ரூப முதலியவுடைய காரியத்திர வியமாகிய குடமுதலியவற்றிற் கவயவமான கபா லமாலையிற் றன்றுதலானுயினும், புடைத்தலானு யினும் வினை தோன்றும். அதனால் விபாகம். அத னால் அவயவிகளைத் தோற்றுவிப்பதான அசமவா யிகாரணமான சையோகத்திற்கு நாசம்பண்ணப்ப டும். அதனாற் காரியத் திரவியமான அவயவியா ன குடமுதலியவற்றிற்கு நாசம். இங்ஙன மசமவா யிகாரண நாசத்தாற் றிரவியநாசங் காட்டப்பட்ட

து. ஓரிடத்துச் சமவாயிகாரண நாசத்தாற் பிரதியநாசம். எங்ஙனம்? முற்கூறிய பிருதிவியாதிகளுக்குச் சங்காரத்திற் சங்கரிக்கவேண்டி மகேசனுடைய சங்கரித்தல் வேட்கையால், அணுக்களில் வினை, அதனால் விபாகம், விபாகத்தாற் சையோகநாசம்; துவியணுகம் கெடுகையில் ஆசிரயக் கேட்டாற் றிரியணுகாதி நாசம். முறையே பிருதிவியாதி நாசம். எங்ஙனம்? நூற்கேட்டின் இடைகெட்டு அறவுயடைந்த ரூபாதிகளுக்குத் தன் னாசிரயக்கேட்டாலே கேடு. வேறாயின், ஆசிரயமிருக்கையிலே மாறுபட்ட குணமடைதலாற் கேடு; எங்ஙனம்? பாகத்தாற் குட முதலியன ரூபாதிநாசமென்க.

பரமாணு * சற்பாவத்துக்குப் பிரமாணம்யாது? கூறுதும். சாளர வெயிற்கண்ணதாகிய எல்லாவற்றினு நுண்ணியதியாதொன்று தோன்றும், அது தன்னி னுண்ணியதாகிய பரிமாண திரவியத்தாற் றோன்றியது; காரியத் திரவியமாதலில் குடம்போல. அத்திரவியமுங் காரியமே; பெருந் திரவியத்தைத் தோற்றுவிப்பதற்குக் காரியத்துவ நியமத்தால். ஆதலின் இங்ஙனந் துவியணுகமென்னும் வேறு திரவியஞ் சித்தம். அதுவுந் தன்னி னுண்ணியதாகிய சமவாயிகாரணத் திரவியத்தாற் றோன்றும்; காரியத்திரவியமாதலில்; குடம்போல. யாது துவியணுகத்தைத் தோற்றுவிப்பதுவே பரமாணு. அதுவுந் தோன்றாததே. அற்றாயின், காரியத் திரவியத்தைத் தோற்றுவிப்பதற்குக் காரியத்துவ நியமமாதலின்.

* சற்பாவம்—உண்மை.

அது தோன்றாத தெங்ஙனம்? கூறுதும். எண்ணிறந்தகாரிய பரம்பரை யநவஸ்தாதோஷம்வருதலின், இங்ஙனமாயிற், பல திரவியத்தாற் பிறத்தல் விசேடமின்மையின். மேருகடுகுகளுக்குத் துல்லிய பரிமாணத்துவம் வருதலின், ஆதலிற் றோன்றாததே பரமாணு. துவியணுகம் இரண்டு பரமாணுக்களானே தோன்றும்; ஒன்றற்குத் தோற்றுவியாமை நியமமாதலின், மூன்று முதலிய கற்பனையிற் பிரமாணமின்மையின், திரியணுக மூன்று துவியணுகங்களானே பிறக்கும்; ஒன்றற்குத் தோற்றுவியாமை நியமமாதலின், இரண்டாற் றோன்றிற் காரியத்தை யடைந்த மகத்வந் தோன்றாமை வரல்வேண்டுதலின். காரியத்தின் மகத்துவங் காரணத்தின் மகத்துவத்தானாவது காரணப் பன்மையானாவதன்றோ? அவற்றுள் முதலதின்மையின் சொற்றது வேண்டத்தக்கது; நான்கு முதலிய கற்பனையிற் பிரமாணமின்மையின், மூன்றானே மகத்துவந் தோன்றுதல் கூடுதலின்.

ஆகாயம் சத்த குணமுடைய தாகாயம். சங்கியை, பரிமாணம், பிருதக்த்வம், சையோகம், விபாகமுடையது; ஏகம்; விபு; நித்தியம்; சத்தலிங்கமுடையது. அதற்குச் சத்தலிங்க மெங்ஙனம்? பாரிசேடத்தால்; அங்ஙனமன்றோ சத்தம் குணம்; சாமானியமுடையதாய் நம்மனோர் புறவிந்திரியமொன்றாற் கிரகிக்கப்படுதலின்; ரூபாதி போல. குணமுங் குணியைப்பற்றியதே. அதற்குப் பிருதிவியாதி நான்குமான்மாவுங் குணியாகத்தகா; சத்தஞ் செவியாற் கிரகிக்கப்படுதலின்; யா

வை, பிருதிவியாதி குணங்கள்? அவை சுரோத்திரேந்திரியத்தாற் கிரகிப்பன அல்ல. எங்ஙனம்? ரூபாதிகள். சத்தஞ் சுரோத்திரேந்திரியத்தாற் கிரகிக்கப்படும். திக்குக் கால மனங்களது குணமன்று விசேடகுணமாதலின். ஆதலின் இவ்வெட்டினின்றும் வேறாகச் சத்தத்திற்குக் குணியநுமிக்கப்படும். அதுவே யாகாயம். அதுவும் ஒன்று; பேதத்திற்பிரமாணமின்மையின், ஒருமையாற் கூறுதலின், ஒருமையாதலின். ஆகாயத்துவமென்னுஞ் சாமானியம் ஆகாயத்திலில்லை; சாமானியம் பலவிடத் திருத்தலின். ஆகாயம் விபு-பரமமகற்பரிமாணமுடையதென்று பொருள்; எல்லாவிடத்துங் காரியந் தோன்றுதலின். விபுத்துவத்தா னித்தியம்.

காலம். காலந் திக்கின் வேறான பரத்துவாபரத்துவத்தால் அநுமேயம். சங்கியை, பரிமாணம், பிருதக்த்வம், சையோகம், விபாகமுடையது; ஒன்று; நித்தியம்; விபு. அதற்குத் திக்கின் வேறான பரத்துவாபரத்துவத்தால் அநுமேயத்துவம் எங்ஙனம்? கூறுதும். அணியனை யண்மையா லபரத்துவத்திற் கருகனை முதியோன் கண் வேறான பரத்துவந் தோன்றும். சேயனைய்ச் சேய்மையாற் பரத்துவத்திற் கருகனை இளையோன் கண் வேறான அபரத்துவந் தோன்றும். இதிற் றிக்கின் வேறான பரத்துவமு மபரத்துவமுங் காரியமாய்த் திக்கு முதலிய காரணமுண்டாகாமையிற் காலமே காரணமென்றநுமிக்கப்படும். அஃது ஒன்றாயினும் நிகழ் விறப் பெதிர்வு வினையுபாதி வ

சத்தான் நிகழ்வு முதலிய *வியபதேசத்தை யடையும்; புருடனைப் போல; அவற் கடுதன் முதலிய வினையுபாதிவசத்தான் மடையன் முதலிய வியவதேச மடையும். இதற்கு நித்திய விபுத்துவங்கண் முன் போல.

திக்கு ஒன்று; நித்தியம்; விபு; சங்கியை,
திக்கு. பரிமாணம், பிரதக்த்வம், சையோகம், விபாகமுடையது. அதுவுங், கிழக்கு முதலிய நாமங்களா லறியப்படும்; அவற்றிற்கு வேறு நிமித்தமின்மையின். கிழக்கினும் மேற்கினும் பொருளாண்டேயிருத்தலின். அஃது ஒன்றாயினும் தன் றணேச சையோக வுபாதி வசத்தாற் கிழக்கு முதலிய பெயர்களை யடையும்.

ஆன்மத்துவ சாமானியமுடைய தான்மா.
ஆன்மா. சுக துக்கமுதலிய வேறுபாட்டாற் பலவே. அதுவுங் கூறினார். அதற்குக் குணங்கள், சங்கியை முதலிய ஐந்தும் புத்தி முதலிய ஒன்பதும். அதற்கு நித்தியத்துவ விபுத்துவங்கண் முன் போல.

மநத்துவ சாமானியமுடையது மநம். அ
மநம். து பரிமாண சையோகி. அகவிந்திரியம் மநம். இன்ப முதலிய உபலத்திக்குக் காரணம். சங்கியை முதலிய ஐந்து குணமுடையது. பரத்துவம், அபரத்துவம், வேகமுடையது. இந்த மநசையோகத்தாற் புறவிந்திரியம் புறப்பொருள் கிரகிப்பது. அதனானே யெல்லா உபலத்திக்குஞ் சாதநம். அதுவுங் காட்சியன்று; மற்றென்னெனின் அது

* வியபதேசம்—பெயர்.

மாநத்தாற் றோன்றுவது. அங்ஙனமன்றேல், இன்ப முதலிய உபலத்திகள் கட்புல முதலிய அல்லாக் கரணத்தாற் சாதிப்பன, கட்புல முதலிய இன்றியுந் தோன்றலின், யாது கரணம் அது மநம். அதுவும் அணுபரிமாணம்.

திரவியங்கள் கூறினும்; குணங்கள் கூறுதும்.

குணம்.

சாமாநியமுடையது, சமவாயிகாரணம் அல்லது, வினையல்லது, குணம். அதுவும் பொருளைப் பற்றியது; ரூபம், ரசம், கந்தம், பரிசம், சங்கியை, பரிமாணம், பிரதக்த்வம், சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், குருத்துவம், திரவத்துவம், சிநேகம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம், பிரயத்நம், தருமம், அதருமம், சம்ஸ்காரம் என்னும் பேதத்தா லிருபத்துநான்கு குணமாம்.

உருவம். அவற்றுட் கட்புலமாத்திரையாற் கிரகிப்பது ரூபம்; சாதியுடையது; விசேட குணம்; பிருதிவி முதலிய மூன்றன்கணிருப்பது. அதுவும் வெண்மை முதலிய பல பிரகாரம்; பிருதிவியிற் பாகசரூபம்; தேயுவில் அபாசக வெண்மையொளி; அப்புவி லொளியில்லாத அபாசக வெண்மை.

இரசம். இரசநேந்திரியத்தாற் கிரகிக்கப்படுவது; விசேட குணம்; பிருதிவி புனல்களிலிருப்பது. அவற்றுட் பிருதிவியின் மதுர முதலிய அறுவகைப் பாகசமும், அப்புவின் ம

த்ர மபாசகமும்—நித்தியாநித்தியமாம்; நித்தியம், பரமாணுவான அப்புவி லநித்தியங் காரியமான அப்புவிலெல்லாம்.

கந்தம்: கந்தங், கிராணத்தாற கவருங் குணம். பிருதிவிமாத்திரையினிருப்பது. அது நறுநாற்றந் தீநாற்றமென் றிருவகை. புனல் முதலியவற்றிற் கந்தந்தோன்றல் சையுக்தசமவாயத்தா லென் றறியத்தக்கது.

பரிசம். பரிசந், துவக்கிந்திரியத்தான் மாத்திரங் கிரகிக்கப்படுவது. பிருதிவியாதி நான்கினிருப்பது. அது தண்மை, வெம்மை, தண்மை வெம்மை யில்லதென்னும் பேதத்தான் மூவகை; தண்மை நீரில். வெம்மை தீயில். தண்மை வெம்மை யில்லது பிருதிவி வாயுக்களில். இவ்வுருவாதி நான்கும் மகத்துவத்தோ டொருபொருளிற் சமவேதித்துக்கொண் டிருப்பதங்களாயே காட்சிகள.

சங்கியை. சங்கியை, ஒருமை முதலிய வியவகாரத்தின் காரணம்—சாமானியகுணம்--ஒன்று முதற் பரார்த்தமளவும். அவற்றுள் ஒருமை இருவகை; நித்த அநித்த பேதத்தான். நித்தியத்தை யடைந்தது நித்தியம். காரியத்தை யடைந்தது அநித்தியம். தன காரிய சமவாயிகாரணத்தை யடைந்தவொருமையாற் றோன்றுவது. இருமையநித்தியமே. அதுவும், இரண்டு பிண்டங்களில் இஃதொன் றிஃதொன்றென்னு மவாவுதற் கருத்தாற் றோன்றும். அவற்றுட், பிண்டங்கள் சமவாயிகாரணம்—பிண்டங்களி லொருமைகள சமவாயிகாரணம்—அவாவுதற்கருத்து நிமித்தகாரணம். அ

வாவுதற்கருத்து நாசத்தானே யிருமைநாசம். இங்ஙனே மும்மை முதலிய தோற்றம்.

பரிமாணம் பரிமாணம், அளவு வியவகாரத்தின் காரணம். அது அணு, மகத்து, நெடில், குறில் என நான்கு வகை. இன்னும் அது நித்த அநித்தபேதத்தா லிருவகை. நித்தியத்தைஅடைந்தது நித்தியம். காரியத்தை யடைந்த அநித்தியம்; காரியத்தை யடைந்த பரிமாணங் காரணத்தை யடைந்த சங்கியாயோகி, பரிமாணயோகி, பிரசயயோகி; அவை யெங்ஙனம்? துவியணுகபரிமாண மீசுவர னபேட்சாபுத்தியாற் றோன்றிய பரமாணு இருமையாற் சங்கியாயோகி—சங்கியாகாரணமென்று பொருள். திரியணுகபரிமாணமுந், தனதாசிரய சமவாயிகாரணத்தை யடைந்த பன்மைச் சங்கியாயோகி. சதுரணுகாதி பரிமாணந் தனதாசிரய சமவாயிகாரண பரிமாணத்தாற் றோன்றியது. பஞ்சிந் திரட்சி பரிமாணந் தனதாசிரய சமவாயிகாரண அவயவங்களது பிரசிதில சையோகத்தாற் றோன்றியது. பரமாணு பரிமாணமு மாகாயாதியையடைந்த பாரிமாண்டல்ய மென்னும் பரமமகற் பரிமாணமு நித்தியமே.

பிரதக்த்வம் பிரதக்த்வம் வேறென்னும் வியவகாரத்தின் காரணம்.

சையோகம் சையோகஞ் சையுக்தவியவகாரத்தி னேது—இரண்டன்கண்ணது,—அவ்வியாப்பிய விருத்தியது. அது வேறு வினையாற்றோன்றியது, இரண்டன் வினையாற் றோன்

றியது, சையோகத்தாற் றோன்றியதென மூவகை. அவற்றுள் வேறுவினையாற் றோன்றுவதெங்ஙனம்? வினையுடைப் பருந்தோடு வினையில் குற்றிக்குச் சையோகம். அதற்குப் பருந்தின் வினை யசமவாயிகாரணம். இரண்டன் வினையாற் றோன்றுவதெங்ஙனம்? வினையுடைய மல்லரது சையோகம். சையோகத்தாற் றோன்றுவதெங்ஙனம்? காரண அகாரண சையோகத்தாற் காரிய அகாரிய சையோகம். எங்ஙனம்? கைத்தருவின் சையோகத்தான் மெய்த்தருச் சையோகம்.

விபாகம்

விபாகம் பிரிவின் வியவகாரஏது. சையோகமுதற்று யிரண்டன்கண் ணிருப்பது. அது வேறுவினையாற் றோன்றியது, இரண்டன்வினையாற் றோன்றியது, விபாகத்தாற் றோன்றியதென மூவகை. அவற்றுள் முதலதெங்ஙன்? மலையினின்று பெயரும் பருந்தின் வினையாற் பருந்தொடு மலைக்கு விபாகம். இரண்டாவதெங்ஙன்? தகர்களது விபாகம். மூன்றாவதெங்ஙன்? கைத்தரு விபாகத்தான் மெய்த்தரு விபாகம்.

பரத்துவம் அபரத்துவம்

பரத்துவாபரத்துவங்கள், பர அபர வியவகாரத்தின் காரணங்கள். அவை திக்கான் வந்தவுங் காலத்தான் வந்தவுமென இருவகைய.

அவற்றுட் டிக்கான் வந்தவற்றது தோற்றங் கூறுதும்.

ஒரு திசையிலிருக்கும் பிண்டங்களில் இஃதிதனி னணித்தென்னும் புத்தியால் அநுக்கிரகிக்கப்பட்

டதிக்குப் பிண்ட சையோகத்தால், அபரத்துவம் அணியதன்கட்டோன்றும்; சேய்மைப் புத்தியாற் பரத்துவஞ் சேயதன்கட் டோன்றும். பிண்டத்தினுடைய அண்மை காண்பவனதுடம் பினோட்டைசயினுற் சையுக்த சையோக அற்பீயத்துவம்; அதற்றின் *பூயத்துவஞ் சேய்மை.

காலத்தால் வந்த பரத்துவாபரத்துவங்களது தோற்றங் கூறுதும்.

நியமமில்லாத திக்கினிருக்கின்ற இளையோன் மூத்தோனுடைய பிண்டங்களில் இவனவனினற்பகால சம்பந்தனென்னு மிவ்வகையவாயுதற் புத்தியால் அநுக்கிரகிக்கப்பட்ட கால பிண்டங்களினுடைய சையோகத்தா லிளையோன்கணபரத்துவந் தோன்றும். இவன் அவனின் மிகுந்த கால சம்பந்தமுடையனென்னும் புத்தியான் மூத்தோன்கட் பரத்துவந் தோன்றும்.

குருத்துவம் குருத்துவம், முதல்வீழ்தலினசமவாயிகாரணம். பிருதிவி புனல்களினிருப்பது. சையோகம் வேக முயற்சியின்மையிற் குருத்துவத்தால் வீழ்தலுளதென்று கூறப்படும்.

திரவத்துவம் திரவத்துவம் முதலொழுகுதலினசமவாயிகாரணம்; நிலந் தேயு நீரினிருப்பது. திரவத்துவம், நிலத்தியான நெய் பொன்களுக்குத் தீ சையோகத்தாற் றிரவத்துவமாதலின், நைமித்திகத் திரவத்துவம்; நீரின், இயற்கைத் திரவத்துவம்.

* பூயத்துவம்—அதிகம்.

சிநேகந் திரட்டுதலி னேது: நீரின்பாக்
சிநேகம் கிரமிருப்பது; காரண குணமுதற்று; கு
ருத்துவமுதலியபோலப் பொருணிற்குந்
துணையுமிற்பது.

சத்தஞ் செவிப்புலனாற் கவர்வது; ஆ
சத்தம் காய விசேட குணம்.

அற்றாயின், அதற்குச் செவிப்புலனாற் கிரகிக்கப்
படுதலெங்ஙனம்? யாண்டாயினு முரசு முதலிய இ
டத்திற் சத்தந் தோன்றும். செவிப்புலன் புருட
னிடத்தே இருக்கும்.

அஃதொக்கும்; முரசிடத்தே தோன்றிய சத்தம்
வீசிதரங்க நியாயத்தானுன், கதம்பமுகுள நியாய
த்தானுன் றனக்கணித்தான சத்தந் தோற்றுவிக்
கும், சத்தமுஞ் சத்தாந்தரந் தோற்றுவிக்குமென்
னுமுறைமையாற் செவிப்புலனிடத்தே யிறுதிச்ச
த்தந்தோன்றும். அவ்விறுதிச்சத்தஞ் செவிப்புலனா
ற் கிரகிக்கப்படும்—முதலது நடுவதுமல்ல.

இங்ஙனம் வேய் பிளக்குங்கா லிரு பிளவி னீக்க
த்திற்றோன்றிய சத்தஞ் சத்தாந்தரந் தோற்றுவிக்
கு முறையானே செவிப்புலனிறுதிச்சத்தந் தோன்
றும். அவ்வீற்றிற் சத்தஞ் செவிப்புலனாற் கவரப்ப
டும்.

முரசொலி யென்னாற் கேட்கப்பட்ட தென்னும்
புத்தி யீண்டுப் பிரமாணம். முரசொலி தோன்று
மையின் முரசாகாய சையோகமசமவாயிகாரணம்.
முரசு குணிற் சையோக நிமித்தகாரணம். வேய் பி
ளத்தலாற்றோன்றிய சட சட வொலித் தோற்றத்
தின், வேய் பிள வாகாய சையோக மசமவாயிகார

ணம், இருபிளவினீக்க நிமித்தகாரணம். இங்ஙனமு தலொலி சையோகத்தாற் றோன்றியதும் விபாகத் தாற் றோன்றியதுமாம். முதல தொழிந்திடு மொ லிகள் சத்தத்தை யசமவாயிகாரணமாகவுடையன. அநுகூலவாயு நிமித்தகாரணம். சையோகத்தால் வி பாகத்தாற் சத்தத்தாற் சத்தந் தோன்றுமென்று பிறருங் கூறினர். முதலது முதலான எல்லாச் சத் தங்களுக்கு மாகாயமே சமவாயிகாரணம். வினை பு த்திபோல முக்கணமாத்திர அவத்தையது. அவற் றுள் முதலனவொலிகள் காரிய சத்தத்தாற் கெ டும். ஈற்ற திற்றயலா வீற்றய வீற்றுற் சுந்தோபசு ந்த நியாயத்தாற் கெடுமென்பது பொருந்தாது; முக்கண வவத்தையான வீற்றதுடைய இரண்டாங் கணத்தி லிருப்பதான மூன்றாங் கணத் தில்லையான ஈற்றயலா வீற்றுக்கேடு தோன்றல் பொருந்தாமை யின். ஆதலி னீற்றயற் கேட்டானே யீற்றுக்கேடு. சத்தத்தின் கேடதுமாகத்தால். அங்ஙனமன்றே? சத்த மநித்தியம்; சாமானியமுடையதாய் நம்மனோ ர் புறவிந்திரியத்தாற் கவரப்படுதலின்; குடம்போ ல. இதிற் சத்தத்தினுடைய அநித்தியத்துவஞ் சா த்தியம்; அநித்தியத்துவமும் விநாசத்தோடு கூடிய சொரூபத்துவம். விநாசத்தோடுகூடியசத்தை பொ ருந்தாது; சத்தையில்லாதபிராகபாவத்தின் அநித்தி யத்துவ மின்மை வேண்டுதலின். சாமானிய மு டையதாய் நம்மனோர் புறவிந்திரியத்தாற் கிரகிக்க ப்படுதலேது. இந்திரியத்தாற் கிரகிக்கப்படுதலெ ன்று கூறி லான்மாவின் வியபிசாரம்வருதலின் புற

விந்திரியமென்று கூறப்பட்டது. யோகி புறவிந்திரியத்தாற் கவர்வதான அதனோடு வியபிசாரம் வருதலின் அதை விலக்கும்பொருட்டு நம்மனோரென்று கூறப்பட்டது. யோகி யுண்மையிற் பிரமாணம் யாது? கூறுதும். பரமாணுக்க ளொருவர்க்குக்காட்சி; பிரமேயமாதலின். குடம்போல, யாவன் பிரமாணுவைக் காண்பா னவனே யோகி. அங்ஙனமாயினுஞ் சாமரிமியாதிகளோடு வியபிசாரம் வருதலின் சாமாநியமுடையதாய் என்று கூறப்பட்டது. சாமாநிய முதன்மூன்றுஞ் சாமாநியமுடையவல்ல.

புத்தி பொருள் விளக்கம் புத்தி.

சுகம் பிரிதி சுகம்; அது, எல்லாராலு மநுகூலமாக அறியத்தக்கது,

துக்கம் பீடை துக்கம், அது, எல்லாராலும் பிரதிகூலமாக அறியத்தக்கது.

இராகம் இராகம், இச்சை.

துவேஷம் குரோதந் துவேஷம்.

பிரயத்நம் ஊக்கம் பிரயத்நம்.

புத்தியாதி யாறும் மாநதக் காட்சி.

தருமம் அதருமம் தருமாதருமங்கள் சுக துக்கங்களுக் கசாதாரண காரணங்கள். அவை காட்சியல்ல; அநுமிக்கப்படும். தேவதத்த னுடம்பு முதலிய தேவதத்தன் விசேட குணத்தாற் றோன்றியன; காரியமாய்த் தேவதத்தனுக்குப் போக மேதுவாதலின். அது தேவதத்தன் முயற்சியாற் பிறந்த பொருட்போலும். யாதுடம்பு முதலியவற்றைத் தோற்றுவிப்பதான ஆன்ம விசேட குணம்,

அதுவேதாரமமும், அகருமமும்; முயற்சி முதலிய ன உடம்புமுதலியவற்றைத் தோற்றுவியாமையின்.

சம்ஸ்காரம் சம்ஸ்காரம்: வேகம், பாவனை, திதித் தாபகமென மூவகை.

அவற்றுள் வேகம், பிருதிவி முதனான்கினு மந திதினுமிருப்பது; வினைக்கேது.

பாவனையென்னுஞ் சம்ஸ்காரம், ஆன்மாவின்மா த்திரையாயிருப்பது அநுபவத்தாற் றோன்றியது. நினைவிற் கேது. அதுவு மெழுந்தே நினைவைத்தோ ற்றுவிக்கும். எழுதல் துணையுண்டாதல்; சம்ஸ்கா ரிக்குத் துணைகள் ஒப்புமைகாண்டன் முதலியன.

ஒப்புத் திர்ஷ்டஞ், சிந்தைமுதலியன உள்ளுதல் வித்தையுணர்த்துவனவாமென்று பிறருங் கூறினர்.

திதித்தாபகம் பரிசம்போல விசேடித்திருப்பது. தனக்கிடமாய் வேறொரு வடிவான தநுமுதலியவ ற்றிற் கந்நிலைமையை மீட்டு மடைவிப்பது. இப்புத் தி முதற்றருமாதரும மீறானவையும் பாவனையும் ஆ ன்மவிசேட குணம்.

குணங்கள் கூறினும். கருமங் கூறுதும்.

கருமம்.

புடைபெயர்ச்சி கருமம்; குணங்கள்போலத் திர வியமாத்திரத் திருப்பது; மூர்த்தத்துவ பரியாய நாமமுடைய விபுவல்லாத பொருளின் பரிமாணத் தோடு கூட ஒரு பொருளிற் சமவேதித்திருப்பது; விபாகவழியான், முதலிடத்திற் சையோக நாசத் தில்; பின்னிடத்தின் சையோகவேது: எழுதல், வி

ழுதல், முடக்கல், நீட்டல், நடத்தலென்னுங் கூறுபாட்டால் ஐவகை †சுழறன் முதலியன நடத்தலுள் அடங்கும்.

சாமானியம்.

அநுவிருத்தி ஞானவேது சாமானியம்; திரவிய முதன்மூன்றினிருப்பது. சாமானியம், நித்தியம், ஏகம், அநேகானுகதம்

அதுவும் பரமெனவும், அபரமெனவும் இருவகை. அவற்றுட் பரஞ் சத்தை; பலவிடயமாதலின். அதுவும் அநுவிருத்தி ஞானமாத்திரமேதுவாதலிற் சாமானிய மாத்திரம், அபரந் திரவியத்துவ முதலின; அற்ப விடயமாதலின். அதுவும் * வியாவிருத்திக்கும் ஏதுவாதலிற், சாமானிய விசேடம். இதில் வியத்தியின் வேறான சாமானியமில்லென்றொருவன் கூறினை; இதிற் கூறுதும்: ஆயிற் பின்னமாய் வேறுபட்ட விலக்கணமுடைய பிண்டங்களினேகாகார புத்தியெல்லாவற்றினு முடைந்த வொன்றனையே யல்லாமல் யாதைப் பற்றி நிற்கும்? அதுவே சாமானியமென்க. அற்றாயின் தானல்லதினீக்கத்தாற் பண்ணப்பட்டதே அவற்றுள் ஏகாகாரபுத்தியாக

† உட்சேபணம், அவட்சேபணம், ஆகுஞ்சநம், பிரசாரணம், கமநமென வடநூலிற் கண்டன. இங்ஙன முறையே எழுதல், விழுதல், முடக்கல், நீட்டல், நடத்தலென மொழிபெயர்க்கப்பட்டன.

* வியாவிருத்தி—நீக்கம்.

அங்ஙனமன்றே யெல்லா ஆவடிவினிலும் ஆவல்லாத புரவி முதலியவற்றி னீக்கமுண்டு; பல ஆவடிவினை இவ் வேகாகார ஞானம் ஆவல்லதி னீக்கவிடய முடையதே விதி ரூபமான அத்தன்மை யோக்கியான சாமானிய விடயமன்றேயெனின், இங்ஙனமன்று; விதிரூபத்தானே யேகாகாரங் களர்தலின்

விசேடம்

விசேடம், நித்தியத் திரவியத் திருப்பது; வியாவிருத்தி புத்திமாத்திரத்திற் கேது. நித்தியத் திரவியங்கள் ஆகாய முதலிய வைந்து; பரமாணு ரூபமான பிருதிவியாதி நான்கு.

சமவாயம்.

நீக்கமின்றியிருப்பவற்றின் சம்பந்தம், சமவாயம். அது கூறப்பட்டதே. அற்றாயின்; அவயவ அவயவிகள் நீக்கமின்றியிருப்பன, ஆதலினவற்றது சம்பந்தஞ் சமவாயமென்பது பொருந்தாது; அவயவத்தின் வேறு அவயவி யின்மையின். பரமாணுக்களன்றே அங்ஙனம் பல கூடி யிது குடமென்று கூறப்படும். இதிற் கூறுதும். குடம் பரியதென்று காட்சியுண்டு. அது பலவாய்ப் பரியதல்லதாய்ப் புலப்படாததாகிய பரமாணுக்களிலே யுண்டாதறகாது.

இப் புத்திமயக்கமென்னில்? அன்று; வாதகமின்மையின்.

ஆதலி னிங்ஙனந் திரவியாதி யறுபொருளுங் கூறப்பட்டன. அவை விதிமுகஞானத்தால் அறியப்படுதலிற் பாவரூபங்களே.

அபாவம்.

இப்பொழுது நிடேதமுகப் பிரமாணத்தால் அறிவதாகிய அபாவமான வேழாம்பதார்த்தங் கூறுதும்.

அவ்வபாவம் சமுசர்க்காபாவமெனவும், அந்யோந்யா பாவமெனவும் வகையானிரண்டு.

சமுசர்க்காபாவம் பிராகபாவமும், பிரத்துவம்சாபாவமும், அத்தியந்தாபாவமுமென மூவகை.

உற்பத்திக்கு முன் காரணங்களிற் காரியமின்மை பிராகபாவம். எங்ஙனம்? நூல்களில் ஆடையில்லை; அஃதநாதி; தோற்றமின்மையின். கெடுவதுங் காரியமே; அதன் கேடாதலின்.

தோன்றிய காரியத்திற் காரணங்களின்மை பிரத்துவம்சாபாவம்—கெடுதலென்னு மளவு. எங்ஙனம்? குடமுடைகையி லோட்டிற் குடமில்லை; கோலடித்தன் முதலியவற்றாற் பிறப்பது அது தோன்றலதாயினுங் கேடில்லது; கெட்டது மீண்டுந் தோன்றாமையின்.

முக்காலத்திலு மின்மை யத்தியந்தாபாவம். எங்ஙனம்? வாயுவி லுருவமில்லை.

அந்யோந்யாபாவந் தாதான்மியத்தைப் பிரதியோகியாக வுடைய அபாவம். எங்ஙனம்? குடமா டையன்று. இங்ஙனம் அருத்தங்கள் கூறப்பட்டன.

அற்றாயின் ஞானத்திலும் பிரமத்திலும் வேறுன

பொருளில்லையெனின் இங்ஙனமன்று; அருத்தங்கள் காட்சியான் மறைக்கப்படாமையின்.

புத்தி.

புத்தி, ஞானம், உபலப்தி, பிரத்தியயமென்பன முதலிய பரியாயச் சொற்களால் யாது கூறப்படும் அது புத்தி. புத்தி பொருள் விளக்கும். அது அநுபவமும் ஸ்மரணமுமென வகையான் இரண்டு.

அநுபவம் யதார்த்தமும் அயதார்த்தமுமென இருவகை.

அவற்றுள் யதார்த்தமாவது அவிசம்வாதமாய்க் காட்சிமுதலிய பிரமாணங்களாற் றோன்றுவது. எங்ஙனம்? குற்றமில்லாத கட்புலமுதலியவற்றாற் குடமுதலிய ஞானம்; புகையை இலிங்கமாகவுடைய தீ ஞானம்; ஆவொப்புமை காண்டலா லாமாவென்னுஞ் சத்தவாச்சிய ஞானம். "சோதிட்டோமத்தாற் றுறக்கம்வேண்டியான வேட்க" வென்பது முதலிய வாக்கியத்தாற் சோதிட்டோமத்திற்குத் துறக்கசாதநத்துவ ஞானம்.

அயதார்த்த மருத்தத்தை நீங்கினது—அப்பிரமாணத்தாற் றோன்றுவது: அது சமுசயம், தருக்கம், விபரியயமென மூவகை. சமுசயதருக்கங்கண் மேற்கூறுதும். விபரீத மஃதல்லதின்கண் தத்வர்ச்சி—பிரமமென்னு மளவு எங்ஙனம்? முன்னர்த் தோன்றும் வெள்ளியல்லாத இப்பியின் இது வெள்ளியென்று வெள்ளி வருவித்தல்.

ஸ்மரணமும் யதார்த்தமும், அயதார்த்தமுமெ

ண இருவகை. யதார்த்தம் நனவில். கனவிலெல்லா ஞாநமும், அயதார்த்த ஸ்மரணம்; குற்றவசத்தால் அதுவென்புழி யிதுவென்பது தோன்றலின். எல்லா ஞாநமு நிராகாரமே. ஞாநத்தில் அருத்தத்தாற் றனதாகாரந் தோன்றுமென்பதன்று. சாகாரஞாநவாத நிராகரித்தலின். அதனானே ஞாநாகாரத்தால் அருத்தானுமானமுந் தள்ளப்பட்டது. குடமுதலியனகாட்சியர்தலின். எல்லாஞாநமும் அருத்தத்தாற் கூறப்படுவன.* அது பொருளோடு கூடியே மநத்தால்அறியப்படுதலின் நான் குடஞாநவானென் றிவ்வளவுந் தோன்றும். ஞாநமாத்திரவான் நானென்று தோன்றுது.

5. மநம்.

அகவிந்திரியம் மநம். அதுவுங் கூறினும்.

6. பிரவிருத்தி.

பிரவிருத்தி தருமாதருமங்கள். பிரவிருத்தி சகலியவகாரத்தின் காரணமாதலின்.

7. தோடம்.

தோடம் இராகத்துவேஷ மோகங்கள். இராகம் இச்சை, துவேஷம், குரோதம்; மோகம், பொய்ம்மையறிவு—விபரியயமென்னு மளவு.

8. பிரேத்தியபாவம்.

பிரேத்தியபாவம், மீண்டும்பிறத்தல்; அஃது அன்மா புதிய உடம்போடு கூடுதல்.

9. பலம்.

பலம் போகம்; சுக துக்க அநுபவம்.

10. துக்கம்.

துக்கம் பீடை; அதுவுங் கூறிறும்.

11. அபவர்க்கம்.

அபவர்க்கம் மோக்ஷம். அதாவது இருபத்தொராவகைத் துக்க முழுதுந் தொலைதல். இருபத்தொருவகை: உடம்பு, அறிந்திரியங்கள், அறு விடயம், அறு ஞானம், சுக துக்க மென்பனவே. இங்ஙனங் கௌண முக்கிய பேதத்தாற் சுகந் துக்கந் தோடு கூடலிற் றுக்கமென் றுபசரிக்கப்படும். கூட்டம் நீங்காதிருத்தல். இவ்வுபசாரம், தேன் விடத்தோடு கூடிற் றேனும் விடமெனற்பாலில் வைத்தல் போல. அவ்வபவர்க்க மெங்ஙன முண்டாமெனிற் கூறுதும். நூலாராய்ந்தறியப்பட்ட யதார்த்த மெய்யுணர்வுடையனைப் விடயக் குற்றங் காண்டலால் விரத்தியாய் வீட்டின்ப வேட்கையுடையனைத் தியாந பரிபாக வசத்தாற் றேருணர்ச்சி யான்மா வுடையனைக் கிம்சைநீங்கினவனைக் கிட்காம கருமாநுட்டானத்தால் வருவதான தருமாதரும மீட்டாதவனைப் பூர்வமடைந்த தருமாதருமக்கூட்டத்தை யோகப் பெருமையாலறிந் தொருங்கு துகர்வானுக்கு முன்னர்க் கரும நிவிர்த்தியி னிகழ்கின்ற உடம்பு நீக்கத்தில், மறுபடம்பின்மையின். இருபத்தொரு துக்கஞ் சம்பந்தமுண்டாகா; காரணமின்மையின். இருபத்தொரு துக்கத் தேகடு மோக்-

கம். அது, அபவர்க்கம். இனிச் சம்சயங் கூறுதும்.

௩. சம்சயம்.

ஒரு தருமியின் மாறுபட்ட பலபொருண் ஞானஞ் சம்சயம். அது மூவகை

ஒன்று, விசேடங் காணாதிருக்கையிற் சமான தருமதரிசநத்தாற் றோன்றியது. எங்ஙனம்? குற்றியோ மகனோவென்று முன்னிற்கு மொரு பொருளின்கண்ணே குற்றிமை துணிவிக்கும் வளைவு பொந்து முதலியன.—மகன்மை துணிவிக்குந் தலை கை முதலியனவென்று விசேடங் காணானாய்க் குற்றி மகற் கொத்த வுயர்ச்சி வடிவு காண்பானு மகற்கு, இவ்வுருக் குற்றியோ மகனோவென்று சம்சயமுண்டாம்.

இரண்டாஞ் சம்சயம் விசேடங் காணாதிருக்கையில் விபாதத்தாற் றோன்றுவது. இச்சொல் நித்தியமோ அநித்தியமோவென, ஒருவன் சொல் நித்தமென, மற்றொருவன், அநித்தமென்னில்: அவரது விவாதத்தால், விசேடங் காணாத நடுவிருந்த மகற்கு, இச்சொல் நித்தியமோ அல்ல தநித்தியமோவென்று, சம்சயமுண்டாம்.

அசாதாரண தருமத்தாற் றோன்றிய சம்சயமெங்ஙனம்? நித்திய அநித்தியத்தி னீங்கின நிலமாத் திரத் திருப்பதான அசாதாரண தருமமான மணமுடைமையால் விசேடங்காணானுக்கு நிலத்தினித்தியாநித்தியத்துவ சம்சயமுண்டாம். அங்ஙனமன்றே, எல்லா நித்தியத்துவனீங்கின மணமுடைமையோடு கூடுதலின் நிலம் அநித்தியமோ அல்ல

லது எல்லா அநித்தியத்துவ நீங்கின வதனோடு கூடுதலின் நித்தியமோவென்று சமசயம்.

௪. பிரயோசநம்.

எதனை வேண்டப்பட்டு மகன் முயலாநின்றான், அது பிரயோசநம். அது சுகமடைதல்—துக்கக்கேடு. வாளாவிருப்பார்க்கு அதின்பொருட்டன்றோ முயற்சியும்.

௫. திட்டாந்தம்.

வாதி பிரதிவாதிகட் குடம்பாட்டு விடயமான அருத்தந் திட்டாந்தம். அது இருவகை. ஒன்று சாதருமி திட்டாந்தம் எங்ஙனம்? புகையுடைமையேதுவின்கணட்டில். இரண்டாவது வைதருமி திட்டாந்தம். எங்ஙனம்? அவ்வேதுவிற்கே மடு.

௬. சித்தாந்தம்.

பிராமாணிகத் தன்மையா னுடம்படு மருத்தஞ் சித்தாந்தம். அது சர்வதந்திரம், பிரதி தந்திரம், அதிகரணம், அபியுபகமமென நால்வகை.

அவற்றுட் சர்வதந்திர சித்தாந்த மெங்ஙனம்? தருமிமாத்திர வுண்மை.

இரண்டாவ தெங்ஙனம்? நையாயிகர்க்கு மநமிந்திரியம். அதுவுஞ் சமான தந்திரமான வைசேடிகத்திற் சித்தம்.

மூன்றாவ தெங்ஙனம்? சில முதலானவற்றின் கருத்தாச் சித்திக்கையி லவனுக்குச் சர்வஞ்ஞத்துவம்.

நான்காவ தெங்ஙனம்? சைமினியினுடைய வித

தியாநித்திய விசார மெய்ப்படியாயினுமாகச் சத்தங் குணமென்பது.

எ. அவயவம்.

அநுமாந வாக்கியத்தினுடைய ஏகதேசங்களவயவங்கள். அவை பிரதிஞ்ஞை முதலையினவை. அங்ஙன் நியாயசூத்திரமும்; பிரதிஞ்ஞை யேதுவுதாரண உபநய நிகமநங்க ளவயவங்கள்.

அவற்றுட் சாத்தியதரும விசிட்ட தருமிப் பிரதிபாதக வசநம், பிரதிஞ்ஞை. எங்ஙனம்? இம் மலை தீயுடைத்தென்பது.

பஞ்சமியந்தமான லிங்கப் பிரதிபாதக வசநமேது எங்ஙனம்? புகையுண்மையினென்பது.

வியாத்தியோடு கூடின திட்டாந்த வசந முதாகரணம். எங்ஙனம்? யாது புகையுடைத்து அது தீயுடைத்து; எங்ஙனம்? அட்டில் என்பது பக்கத்தில் இலிங்கத்தி னுபசங்கார முபநயம் எங்ஙனம்? இதுவும் புகையுடையதென்பது. பக்கத்திற் சாத்தியத்தி னுபசங்கார நிகமநம் எங்ஙனம்? ஆகையாற் றீயுடையதென்பது. இப் பிரதிஞ்ஞை முதலைந்தும் அநுமாந வாக்கியத்தின் பஞ்சாவயவங்கள்; அவயவம் போல. அவயவங்கள் சமவாயிகாரணமல்ல; சத்தமாகாயத்திற் சமவேதித்திருக்கையால்.

அ. தருக்கம்.

அநிட்டப்பிரசக்கந் தருக்கம்.—சித்தமான வியாத்தியையுடைய தருமங்களுள் வியாப்பிய வங்கீகா

த்தால் வியாபகத்தின் வரவு. எங்ஙனம்? சண்டுக் கடமுண்டாயினப்போது நிலம்போலக் காணப்படுமென்பது. இத் தருக்கம் பிரமாணத்துக் கநுக்கிரகம். அங்ஙனமன்றே இப்பாலே தீயுடையதோ வில்லதோவென்று மையத்தின் பின், ஒருவன் றீயில்லதென்று கருதின் அப்போ தவனைக் குறித்துந் தீயில்லதாயினதனாற் புகையில்லதாமாக வேண்டுமென்று புகையில்லாமையின் வரவுபண்ணப்படும். அதுவே தருக்கம்.—அநிட்டப் பிரசங்கமென்றுஞ் சொல்லப்படும். இத் தருக்கம் சாத்தியரூபமான அர்த்தம் நிகழ்கின்ற தர்க்கத்துக்கு விடயம்; தீயில்லாமையைத் தள்ளுதலால். ஆதலில் அநுமானத்துக் கநுக்கிரகம். தர்க்கமுஞ் சமுசயத்திலடங்குமென்றொருவன் சொல்வான் அது பொருந்தாது; ஒரு சார்பையுடைய விடயத்தை யுடையதாகையால்.

௯. நிர்ணயம்.

அவதாரண ஞானம் நிர்ணயம். அது பிரமாண பலம்.

௰. வாதம்.

* தத்துவமறியவேண்டுவான் கதை வாதம். அது, எட்டு நிக்கிரகங்கட் கதிகரணம். அட்ட நிக்கிரகங்களாவன: நியூநம், அதிகம், அபசித்தாந்தம், ஏத்துவாபாச பஞ்சகம்.

௰௧. சற்பம்.

உபயசாதநமுடையதாய் வெல்லவேண்டுமென்

* தத்வம்—மெய்மை.

ரத்தால் வியாபகத்தின் வரவு. எங்ஙனம்? கண்டுகேட்டுண்டாயினப்போது நிலம்போலக் காணப்படுமென்பது. இத் தருக்கம் பிரமாணத்துக் கநுக்கிராகம். அங்ஙனமன்றே இம்மலை தீயுடையதோ தீயில்லதோவென்றையத்தின் பின், ஒருவன் தீயில்லதென்று கருதின் அப்போது அவனைக் குறித்துத் தீயில்லதாயினதனாற் புகையில்லதுமாக வேண்டுமென்று புகையில்லாமையின் வரவு பண்ணப்படும். அதுவே தருக்கம். அநிட்டப் பிரசங்கமென்றுஞ் சொல்லப்படும். இந்தச் சாத்திய ரூபமான அர்த்தம் நிகழ்கின்ற தர்க்கத்துக்கு விடயம்; தீயில்லாமையைத் தள்ளுதலால். ஆதலில் அநுமானத்துக் கநுக்கிராகம். தருக்கஞ் சமுசயத்திலடங்குமென்றொருவன் சொல்வான் அது பொருந்தாது; ஒரு சார்பையுடைய விடயத்தை யுடையதாகையால்.

௯. நிர்ணயம்.

அவதாரண ஞானம் நிர்ணயம். அது பிரமாண பலம்.

௰. வாதம்.

* தத்துவமறியவேண்டுவோன் கதை வாதம். அது, எட்டு நிக்கிரகங்கட் கதிகரணம். அட்ட நிக்கிரகங்களாவன: நியூநம், அதிகம், அபசித்தாந்தம், ஏத்துவாபாச பஞ்சகம்.

௰௧. சற்பம்.

உபயசாதகமுடையதாய் வெல்லவேண்டுமென

* தத்வம் — மெய்ம்மை.

று மிச்சையுடையான் கதை சற்பம். அது எல்லா நிக்கிரகத்திலுங் கிடைத்ததிற் கதிகரணம். பரபட்சந் தூஷிக்கப்படுகையிற் சுபட்ச சாதநப்பிரயோக முடிவாயுள்ளது சற்பம்.

௰௨. விதண்டை.

சுபட்ச தாபநகிரமாய்ப் பரபட்ச தூஷணமாத்திர முடிவாயுள்ள கதை விதண்டை. இவ்வைதண்டிகளுக்குப் பட்சமில்லை. சொல்வார் பலரையுடையதாய்ப் பூர்வோத்தர பட்சத்தைப் பிரதிபாதிக்கும் வாக்கியக்கோவை கதை.

௰௩. ஏத்துவாபாசம்.

சொல்லப்பட்ட பக்கத் தருமத்துவ முதலான ரூபங்களு ளொரு ரூபத்தாற் குறைந்தாலு மேது வல்ல. அதுவுஞ் சில ரூப யோகத்தால் ஏதுவைப் போலத் தோன்ற ஏதுப்போலிகளாம். அவை: அசித்தம், விருத்தம், அநைகாந்திகம், பிரகரணசமம், காலாத்தியாபதிட்டமெனனும் பேதத்தாலைவகை.

1. அசித்தம்.

அவற்றுள் உதயநனால் "வியாத்தியான ஏதுவினுடைய பக்கதருமதையின் ஞானஞ் சித்தி; அதனுடைய அபாவம் அசித்தி" யென் றசித்த லக்கணஞ் சொல்லப்பட்டது. அதுவும் விருத்தமுதலானவற்றினு முண்டெனறு சாங்கரியந் தோன்றுகின்றது; ஆயினு மெவ்வாறு சாங்கரியமின்றா மவ்வாறு சொல்லப்படும். யாதெச் சாதநத்தின் முன்னே தோன்றுந் தோஷ ஞானத்தில் சமர்த்தமா

ம் அதுவே தோடஞாநத்தைப் பண்ணும் — ஆரா
ணை மற்று மளவு; வேறல்ல; முன்னே சொன்ன பி
ன லக்ஷணமே தோஷ மபிவிக்கப்படுமையிற் கண்ட
முடிவாயின் அஃதியத்தக் கூறியாதலின்மையின்.
யாது விபரீதவியாத்தியாற் றோடஞாநத்தைப்பண்
ணுமதுவே விருத்த மேதுப்போலி. யானைவிபரி
சாராதிகளா லப்படியாகும். அவை அநேகாந்திக
முதலாயினவை. அவைகள், வியாத்தி பக்ஷ ம
த்துவ விசிட்ட மாதல் பொருளாகு ளில்லாமை
யான் முன்சொல்லப்பட்ட அர்த்தங்கள்; தோட
ஞாநத்தைப் பண்ணுமென் றுமளவு.

அசித்தம்: ஆசிரயாசித்தம், சொரூபாசித்தம்
வியாப்பியத்துவாசித்தமென மூன்றுவகை.

ஆசிரயாசித்தம் அதற்குள் பக்ஷத்துவக் காசிரய
மறிப்பட்டதது, ஆசிரயாசித்த
ம். ககநாரவிந்தம் மணமு
டையது; அரவிந்தத்தன்மையால்; மடுவிற்றாமரை
போல. இதிற் ககநாரவிந்தம் ஆசிரயம். அதுவு
ன்றே. கடபத்தியம், காரியத்துவத்தால்; கடம்
போலவென்பது மாசிரயாசித்தம்.

அற்றாயின், ஆசிரயமுண்மையாற் காரியத்துவ
ஏதாசிரயாசித்தமன்று. சித்த சாதக மாயினதே.
சித்தமான கடத்தின் அநித்தியத்துவத்தைச் சா
திக்கையால்; இங்ஙனமன்று; சொரூபத்தின் வேறா
ன் றுசிரபமன் றநுமாநத்துக்கு பற்றென்னெனில்
ஐயம். அநுமானத்திலும் நிச்சிதார்த்தத்திலும்
நியாயம் வழங்காது. பற்றெனவிடத்தென்னெனி லய

ப்பொருளிலேயே என்னுநியாயமிருக்கையிற் கடத்
திலே அநித்தியத்துவத்துக் கையமில்லை: நிச்சயத்
திஞலே; சொரூபத்தாற் கடமிருப்பினும் அநித்தி
யத்துவ சந்தேகமின்மையால் ஆசிரயமில்லையென்
ப தாசிரயாசித்தம்—ஏது அல்லது; இது ஆசிரய
முடையதன்றென்பதனுல்.

எவ்வேது வாசிரயத்தி லுமியப்ப
ரோநபாசித்தம், டா தது சொரூபாசித்தம் எங்ஙன
ம்? சாமாநியம் அநித்தியம்; காரிய
த்துவத்தாலென்பது. காரியத்துவ வேது வாசிரய
மான சாமாநியத்திலில்லை. பாகாசித்தமுஞ் சொரூ
பாசித்தமே; எங்ஙனம்? பிருதிவிமுதலான நான்கி
ன் பரமாணுக்களும் அநித்தியம்; கந்தமுடைமை
யாலென்பது. கந்தமுடைமை பக்கமாகு மெல்லா
வற்றினுமில்லை; பிருதிவிமாத்திரத் திருத்தலின். ஆ,
தலின் ஒருகூற்றிலே சொரூபாசித்தம்.

அப்படியேவிசேடணாசித்தம், விசேடியாசித்தம், அசமர்த்த விசேடணாசித்தம், அசமர்த்த விசேடியாசித்தம்முதலானவைசொரூபாசித்தபேதங்கள்.

அவற்றுள் விசேடணாசித்த மெங்ஙனம்? சத்த நித்தியம். திரவியமாய்ப் பரிசமில்லாமையுடைமையின் என்பது. இங்கே திரவியத்துவ விசிட்ட பரிசமில்லாமை யுடைமை யேது. பரிசமில்லாமை மாத்திர மன்று. சத்தத்திற் றிரவியத்துவமு மில்லை; குணமாதலால். ஆதலால் விசேடணாசித்தம்; திரவியத்துவமென்னும்விசேடணமில்லாமையால். அதனேடு கூடிய பரிசமில்லாமையுமில்லை; விசேட

ணத்தினில்லாமையால் விசிட்டரூபமில்லாமையால். எங்ஙனம்? புருடனொருவன் தண்டமின்மையிற் றண்டி விசிட்டபுருடனில்லனே. ஆதலாற் பரிசமில்லாமையுடைத்தாயினும் விசிட்டாபாவத்தாற் சொரூபாசித்தமோர்.

விசேஷ்யாசித்த மெங்ஙனம்? சத்த நித்தியம்; பரிசமில்லாமையாய்த் திரவியத்துவத்தை யுடைமையால் என்பது. ஈண்டிவ் விசிட்டமே; விசேஷ்யமில்லாமையால் விசிட்ட சொரூபமில்லை.

அசமர்த்த விசேடணாசித்த மெங்ஙனம்? சத்த நித்தியம்; குணத்துவமுடையதாய்க் காரணாபாவத்தையுடைமையால் என்பது. இங்கே விசேடணத்துக்குச் சித்தாந்த சாமர்த்தியமில்லை; விசேஷ்யமான காரணாபாவத்துக்கே நித்தியத்துவத்தைச் சாதிக்க வலியுடைமையால். ஆதலா லசமர்த்தம் விசேடணம்; சொரூபாசித்தமென்பது விசேடணாபாவத்தில் விசிட்டமின்மையால். அற்றாயினும், விசேடணமான குணத்துவஞ் சத்தத்திலிருப்பதன்றோ — எப்படி விசேடணமில்லை? அஃதொக்கும்; குணத்துவ முண்மையே; ஆயினு மது விசேடணமன்றாயா தன்னிபத்தைத் தன்றாகவென்னும் பயனுடைய ததுவே யேதுவுக்கு விசேடணமாம்; குணத்துவம் பயனுடைத்தன்று — அசமர்த்தமென்று சொல்லப்பட்டதே.

அசமர்த்த விசேஷ்யாசித்த மெப்படி? இதிலே முன்பின்னான பிரயோகம். சத்த நித்தியம்; அகாரணத்துவமுடையதாய்க் குணத்துவமுடைமையா

ல் என்பது, இங்கே விசேடண மாத்திரமே நித்தியத்துவத்தைச் சாதித்தலின் வலியுடையது, விசேடிய மசமர்த்தம்; சொரூபாசித்தமென்பது, விசேடியாபாவத்தால் விசிட்ட மின்மையால்; விசிட்ட மேதுவாய்க் கொண்டமையால், ஒழிந்தது முன்போல,

வியாப்பியத் துவாசித்தம்

ஈங்கே வியாத்தி யறியப்படாதது வியாப்பியத்துவாசித்தம், அஃ திருவகை; ஒன்று சாத்தியத்தானே யுடனிகழ்ச்சியில்லாதது, மற்றொன்று சோபாதிக சாத்திய சம்பந்தமுடையது.

அவற்றுள் முதல தெங்ஙனம்? யாது சத்து அது கணிகம். எங்ஙனம்? சலதர படலம். விவாத பதமாகிய சப்தாதியுஞ் சத்து. இங்கே சப்தாதி பக்கம்; கணிகத்துவஞ் சாத்தியம்; சத்துவமேது, இவ்வேதுவுக்குக் கணிகத்துவத்தோடு வியாத்தியிற் பிரமாணமில்லை.

இரண்டாவதெங்ஙனம்? கருப்பத்திலிருக்கின்ற மைத்திரிதநயன் கரியன்; மைத்திரி மகன்மையால்; காணப்பட்ட மைத்திரி தநயர் கூட்டம்போல, இங்கே மைத்திரி மகன்மையாற் கருமை சாதிக்கப்படும். மைத்திரி மகன்மை கருமையிற் பிரயோசகமன்று, மற்றென்னெனிற் சாகாதி யாகார பரிணதியே பிரயோசகம். பிரயோசகமுபாதியென்று கூறப்படும், ஆதலான் மைத்திரி மகன்மைக்குக் கருமைச் சம்பந்தத்தில், சாகாதியாகாரப் பரிணமமே யுபாதி. அது வெங்ஙனம்? திக்குப் பு

கைச்சம்பந்தத்தில் ஈர விறகின் சையோகமுபாதி. ஈண்டு உபாதி சம்பந்தத்தால் விபாத்தி யில்லையென்பது; மைத்திரி மகன்மையா லென்று மேது வியாப்பியத்துவாசித்தம். யாகத்துட்பட்ட கொலைமை யதன்மசாதகம்; கொலைமையால்; யாகப்புறத்துக் கொலைமை போல. ஈண்டுக் கொலைமை யதன்மசாதகத்தின்கட் பிரயோசகமன்று. மற்றென்னை? நிஷித்தத்வமே யுபாதியென்பது. முன்போல ஈண்டு முபாதியுண்மையாற் கொலைமை யேது, வியாப்பியத்துவாசித்தம். அற்றாயின் சாதனவியாபகமாய்ச் சாத்திய வியாபகமாயது யாதது வுபாதியென்ப துபாதியிலக்கணம்; அது நிஷித்தத்வத்தினில்லை; அஃதெங்ஙனம் உபாதி? இங்ஙனமன்று, நிஷித்தத்வத்தி னுபாதியிலக்கணமுண்மையால். அங்ஙனமன்றேல், சாத்தியமான அதன்மசாதகத்தவத்துக்கு வியாபக நிஷித்தத்வம். எங்கேயெங்கே யதன்மசாதகத்துவ மங்கேயங்கே நிஷித்தத்வத்தி னிருப்புண்மையால்; எங்கே யெங்கே கொலைமை யங்கேயங்கே நிஷித்தத்துவமவசியமன்று; யாகத்திற் கங்கமான கொலையில் வியபிசாரத்தினால், யாகவங்கமான கொலையிற் கொலைமை யுண்டு. நிஷித்தத்வமில்லை,

இப்படியேமூன்றசித்தங்களுங் காட்டப்பட்டன,

2. விருத்தம்,

சாத்தியத்தின் விபரீதத்தோடு வியாத்தமான எது விருத்தம், எங்ஙனம்? சத்த நித்தியம், காரியத்துவத்தால் என்பது, இங்கே நித்தியத்துவஞ்

சாத்தியம்; அதனுடைய மாறுபாடான அநித்திய த்வே காரியத்துவ வியாப்தம். யாது காரிய மந்த நித்தியமே.

ஆதலால், சாத்திய விபரீதத்தை வியாபித்தலை ற் காரியத்துவ ஏது விருத்தமாகும்.

௩. அநைகாந்திகம்.

சம்சய ஏது அநைகாந்திகம்—வியபிசாரத்தோ டுகூடின ஏதுவு மநைகாந்திகமாம். அது சாதா ரணம் அசாதாரணமென இருவகை. அவற்றுள் முதலாவது பக்க சபக்க விபக்க விருத்தி; எங்ங னம்? "சத்த நித்தியம், பிரமேயத்துவத்தால்" எ ன்பது. பிரமேயத்துவ ஏது பக்கமான சத்தத்தி னுஞ் சபக்கமான நித்தியத்தினும் விபக்கமான அ நித்தியததினு மிருக்கின்றது. எல்லாம் பிரமேயமா தலால். இரண்டாவது சபக்க விபக்கங்களி னில் லாதது; எங்ஙனம்? "நிலம் நித்தியம், கந்தமுடை மையால்." இங்கே கந்தமுடைமையேது, சபக்க மான நித்திய வியோமாதியினின்றும் விபக்கமான அநித்திய சலாதியினின்றும் நீங்கினது. கந்தமுடை மைக்கு பிருதிவிமாத் திரத்திருப்புண்மையால்.

உண்டாகிய சபக்க விபக்கமுடைய வேதுவுக்கு ச் சபக்கத்திலிருந்து விபக்கத்தி னீக்கமாய் நிற்ற லே நியமமாய்க், கமகாங்கத் தன்மையினு வந்த நி யமாபாவமே வியபிசாரம். அது இருவகையாற்கூ டும். சபக்க விபக்கத்தி லிருத்தலானு மவற்றி னி ல்லாமையானும்.

4. பிரகரணசமம்.

யாதுக்குப் பிரதிபட்சமான வேறொரு ஏதுவுண்டதுவே பிரகரணசமம்—சற்பிரதிபட்சமென்றுஞ் சொல்லப்படும். எங்ஙனம்? சத்தநித்தம்; அநித்திய தருமந் தோன்றாமையாலென்பது. இங்கே விபரீதார்த்தத்தைச் சாதியாநின்ற சமானபலமாகிய வேறேதுமாகும் பிரதிபட்சமென்று சொல்லப்படும். யாது துல்லியபலமையன்றது பிரதிபட்சமன்று.

அங்ஙனமன்றேல், விபரீதத்துக்குச் சாதகமான வதிமாகும்: உபசீவியம், உபசீவகம், அநுபயம் என மூன்றையாம். அவற்றுள் முதலது வாதகம்; வலிமையையுடையதால். எங்ஙனம்? பரமாணுக்களநித்தியம் மூர்த்தமாகையால்; கடம்போல. பிரமாணத்தாற் கிரகிக்கப்படாத தருமியான பரமாணுக்களின் அநித்தியத்துவாநுமானங் கூடாது; ஆசிரயாசித்தியால். இவ்வநுமானத்தாற் பரமாணு கிரகிப்புக்குப் பிராமாணியமறியப்பட்டது; அன்றி யிதற்குத் தோற்றமேயில்லாமையால். ஆதலால் உபசீவியம் வாதகமே உபசீவகந் துற்பலமானதால் வாத்தியம். எங்ஙனம்? இந்த வநித்தியத்துவாநுமானமே. மூன்றாவது சற்பிரதிபட்சம்; துல்லியபலத்தால்.

5. காலாத்தியயாபதிட்டம்.

எதற்குப் பிரத்தியட்சாதி பிரமாணத்தாற் பக்கத்திற் சாத்தியாபாவ பரிச்சின்னம், அதுகாலாத்தியயாபதிட்டம்—பாதிதவிடயமென்றுஞ் சொல்

லப்படும். எங்ஙனம்? தீ வெம்மையில்லது பதார்த்தத்வத்தால்; சலம் போல. இங்கே பதார்த்தத்வம் ஏது. அதற்குச் சாத்தியம் வெம்மையில்லது, அதனுடைய அபாவங் காட்சியானே பரிச்சின்னம்; த்வக்கிந்திரியத்தாற் றீயினது வெம்மையில்லாமை தள்ளப்படுகையால். இன்னுங் காலாத்தியயாபிதிட்டமெங்ஙனம்? கணிகத்துவஞ்சாதிக்கின்றபோது முன் சொன்ன சத்துவமேது. இங்கே கணிகத்துவம் சாத்திய மதனுடைய அபாவமாகிய அக்கணிகத்துவம் பிரத்தியபிஞாநபிரத்தியட்சத்தினாலே பரிச்சின்னம் யாதென்றால் முன்னமறியப்பட்டது, அதுவே யிக்கடமென்று பூருவ அநுபவத்தாற் சநித்த வாசனையோடு கூடிய விந்திரியத்தாற் பிறந்து பூருவாபர காலத்தை யடைந்த பிரத்தியபிஞாநத்தாற் கடத்துக்கு நிலைமை துணியப்படும்.

இந்த அசித்த முதலான அஞ்சு மேதுப்போலிகள்; பக்க தருமத்துவ முதலான ரூபிகத்துவத்தாலேதுவல்லன. தஞ் சாத்தியத்தைச் சாதியாதன விலக்கணமாகுங் கேவலவியதிரேகியினுடைய அதிவியாத்தி யவ்வியாத்தி யசம்பவங்களு மிவற்றடங்கும்; இவ்வைந்தினு மதிகமல்ல.

அதி வியாத்தியுடையது வியாப்பியத்துவாசித்தம்; விபக்கத்தினீக்கமில்லாமையால்; சோபாதிகத்துவத்தாலும். எங்ஙனம்? கோவிலக்கணமென்னும் பசுத்துவமதுக்கு, அலதாடி முதலான வுண்மை பிரயோசனம்.

அவ்வியாத்திக்குப் பாகாசித்தம். எங்ஙனம்? கோவிலக்கணமென்னுஞ் சித்திர வன்னமான அலைதாடி. அசம்பவஞ் சொரூபாசித்தம்; கோவிலக்கணமான ஒரு குளம்புடைமை.

௫௪. சலம்.

தாற்பரியம் வேறுபடச் சொல்லுஞ் சொல்லுக்குப் பொருள் வேறு கற்பித்துத் தூடணஞ் சொல்லுதல், சலம். எங்ஙனம்? நூதன தாற்பரியத்தாற் சொல்லப்பட்ட நவகம்பளமுடையானிம்மைந்தனென்னும் வாக்கியத்திற்கு வேறு பொருளாயாசங்கித்தொருவன், இவனுக்கு நவகம்பளங்களில்லை—வறுமையால் இவனுக்கிரண்டாயினுமில்லை—எங்ஙனமொன்பதென்று தூடியாநின்றான். இவ்வாறு சலவாதியாதலாற் றோற்றவன்.

௫௫. சாதி.

அசத்தான உத்தரஞ் சாதி—உற்கருஷசமை அபகருஷசமை முதலான பேதத்தாற் பலவகை பெருகுமென்னும் பயத்தா லெல்லாஞ் சொல்லப்பட்டனவல்ல. அவற்று ளவ்வியாத்தமான இட்டார்த்த தருமத்தாற் சாத்திய அவ்வியாபகத் தருமத்தை வருவித்த லுற்கருஷசமையென்னுஞ் சாதி. எங்ஙனம்? சத்தமநித்தியம், காரியத்துவத்தால்; கடம்போலவென்று சொல்லுதற்கண்; ஒருவனிங்ஙனஞ் சொல்லாநின்றான், காரியத்துவவேதுவாற் கடம்போலச் சத்தமநித்தியமாயின் அந்த வேதுவாலே அதுபோலவே சத்தஞ் சாவயவமா

கவேண்டுமென. அவ்வியாத்தமான திட்டாந்த தருமத்தால் அவ்வியாபகமான தருமத்தின் பாவத்தை வருவித்தல் அபகருஷசமையென்னுஞ் சாதி. எங்ஙனைப்? முன்சொன்ன அநுமானத்தில் ஒருவன் இங்ஙனஞ் சொல்லாநின்றான், காரியத்துவவேதுவாற் கடம்போலச் சத்தம் அநித்தியமாயின் அந்த வேதுவாற் கடம்போலச் சத்தமுஞ் செவியாற் கவரப்படாததாகவேண்டும்; கடஞ்செவியிற் கவர்வதன்றேயென.

௰௯. நிக்கிரகஸ்தானம்.

தோல்வியேது நிக்கிரகஸ்தானம். அது நூநம், அதிகம், அபசித்தாந்தம், அர்த்தாந்தரம், அப்பிரதிபை, மதாநுஞ்ஞை, விரோதம் முதலான பேதத்தாற் பலவிதமாயினும் பெருகுமென்று சொல்லப்பட்டனவல்ல. சொல்லவேண்டிய பொருளிற் சிறிது குறைதல் நூநம். சொல்லவேண்டியபொருளி னதிகம் அதிகம். சித்தாந்தத்தின் கேடு, அபசித்தாந்தம். பிரகிருதத்திற் சம்பந்தமான பொருளுடைய சொல் அர்த்தாந்தரம் உத்தரத்தினது தோன்றாமை அப்பிரதிபை. தனக்குப் பிரதிகூலமாய்ப் பரனுக்குச் சம்மதமான வர்த்தத்தைத் தானேயங்கீகரித்தல் மதாநுஞ்ஞை. இட்டார்த்தபங்கம் விரோதம். ஈண்டு மிகவும் வேண்டாமையாகிய ரூபபேதங்களுக்கிலக்கணங்கூறாமை குற்றமன்று.

தர்க்கபாஷை முற்றியது.

தர்க்கபாஷையின்

அருப்பதவிளக்கம்.

அசத்-இன்மை.

அசமவாயி-சமவாயிகாரணமல்லாதது.

அசித்து- சித்தியில்லாதது.

அட்டில்-அடுக்களை.

அடகு-இலைக்கறி.

அதன்மசாதனம்- தருமமல்லாத செயல்.

அதிகரணம் - அநுமேயத்தோடு தொடர்ந்தது.

அதிதேசம்-ஒப்புமைகாட்டியுணர்த்துதல்.

அதிப்பிரசங்கதோஷம்-மிகைபடக் கூறலென்னுங் குற்றம்.

அதீந்திரியம் - இந்திரியத்திற்கெட்டாதது, இந்திரியத்தை யதிக்கிரமித்தது.

அந்நுவயம்-உடன்பாடு, இயைபு, பொருட்கியையச் சொற்களைச் சேர்த்தல்.

அந்விதம்-கூடி வருவது, தொடர்ந்துவருவது.

அநவஸ்தை- முடிவுபெறாமை.

அநிர்சிதம் - நிச்சயிக்கப்படாதது.

அநுகதம்-நிச்சயிக்கப்பட்டது.

அநுகூலம்-உறவானது.

அநுபயம் — இரண்டற்றது.

அநுபலத்தி- உண்டென்னு ஞானத்தின் இன்மை, ஞானாபாவம்.

அநுமாபகம்- அநுமேயத்தை யுணர்த்துவது, அநுமிக்கப்பண்ணுவது. அறிவிப்பது.

அநுமாநம்-கருதல்.

அநுமிதி- இலிங்கத்தின் பராமரிசத்தாற்றோன்றுமறிவு, கருதலறிவு.

அநுவிருத்தி - தொடர்ச்சி, சேர்ந்திருத்தல்.

அநேகாந்திகம்- பலவற்

றினெருங்குசேறலையு
டையது.
அநைகாந்திகம்- பிறழ்வு
டையது, நியமமில்லது
அப்பியத்துவம்-சிறுமை,
கொஞ்சம்.
அப்பிரதிமை - தோற்று
மை.
அப்பிராமாண்யம்-அப்பி
ரமாத்துவம்.
அபதிட்டம்- மறுக்கப்ப
டுதல், பழிக்கப்படுதல்
அபரத்துவம்-பின்மை.
அபவர்க்கம்-மோட்சம்.
அபாகசம் - பாகத்தாலு
ண்டாகாதது, இயற்
கை.
அபிதேயம்-பெயரிட்டுவ
ழங்கற்பாலது.
அபியுபகமம் - மெய்யெ
ன்றேற்றுக்கொள்ளு
தல்.
அபிவியஞ்சகம் - தெரிவி
த்தல், தோற்றுவித்த
ல், வெளிப்படுத்தல்.
அயதார்த்தம்-பொய்.
அவதாரணம்- நிச்சயித்த
ல்.
அவாதிதம்-கண்டிக்கப்ப
டாதது.

அவாதிதவிடயம் - அறு
மானவாக்கியத்திற்சொ
ல்லப்படும் பஞ்சரூபங்
களுளொன்று; அஃது
ஏதுவுக்கு விடயமான
சாத்தியதருமம் எப்பி
ரமாணத்தானுங் கண்
டிக்கப்படாதிருத்தல்.
அவாந்தரவியாபாரம்- இ
டைத்தொழில்.
அளிசம்பாதம்- பிரமாண
த்தையநுசரித்தது.
ஆ பசு.
ஆசிரயம்- பற்றுக்கோடு,
இருப்பிடம், பக்கம்.
ஆசிரயாசித்தம்-சார்பசி
த்தம்.
ஆலோகம்-ஒளி.
இந்திரியம்-பொறி, அன்
மாவினடையாளம்.
இலக்கணம்-சிறப்பியல்பு,
அடையாளம்.
இலக்கியம் - இலக்கணமு
டையது.
இலிங்கம்- வியாத்தி வலி
யால் மறைந்த பொரு
ளை உணர்த்துவது, வி
யாப்பியமாவது. (குறி,
சாதனம், ஏது என்ப
னபரியாயம்)

உபசிவகம்- அணைந்திருப்பது.

உபசிஷ்பம்-அணைதல்.

உபமிதி-உபமானப் பிரமாணத்தினால் வருமறிவு.

உபலப்தி-அடைதல், அறிவு, புலனறிதல்.

உபாதி-சாத்தியத்திற் சமவியாத்தியுடையதாய்ச் சாதனத்தில் வியாபகமில்லாதது, செயற்கையானது.

உயர்சிறப்படைதல்-விடைதல்.

உற்பூதவுருவப் - பிரத்தியட்சமாய்க் காணப்பட்டவடிவம்.

ஏத்துவாபாசம் - ஏதுப்போலி.

ஏத்வந்தரம்- வேறேரேது.

ஏது சமர்த்தப்பிரவிருத்திசநகம்- பயனுடைச்செலவைத் தோற்றுவித்தல். (ஏது-காரணம். சமர்த்தம்-கொடுத்தல். பிரவிருத்தி-செலவு. சநகம்-தோற்றுவித்தல்)

ஒப்புத்திருஷ்டம்- ஒப்புமைகாண்டல்.

ஔபாதிகம் - உபாதியாலுண்டாயது.

கடம்-குடம்.

கனிகம்- கனமாத்திரத்திலிருப்பது.

கதப்பமூகுளம் - கடப்பமொட்டு.

கபாலமாலா-ஓட்டின் வரிசை.

கடகம்-அடைவது, பெறுதி.

கரணம் உயர்ந்த காரணம்.

காலாத்தியயம் - இறந்தகாலம்.

கிருதகத்துவம்-செய்யப்படுகை.

சங்கியா-எண்-

சங்கேதம்-நியமம்.

சத்து-உள்ளது.

சத்துவம்-உண்மை.

சத்தை-உண்மை, உண்மைத் தன்மையாகிய சாதி.

சந்நிகர்ஷம்-சம்பந்தம்

சமவாயம் ஒற்றுமை, இயைபு.

சமவாயி-முதற்காரணம்
சமவேதம்-பிரியாமை, நீக்கமின்மை.
சமவேதித்தல்-நீக்கமின்றியிருத்தல், பிரியாதிருத்தல்.
சமுசர்க்கம்-கலப்பு.
சலம்- ஒரு கருத்துப்பற்றிக்கூறிய மொழிக்கு வேறு பொருள்படைத்திட்டுக்கொண்டு பழித்தல்.
சவிகற்பம் - விகற்பமுளது.
சற்பாவம்-உண்மை.
சற்பிரதிபக்சம்-உள்ளவிரோதியுடையது.
சாட்சாத்-பிரத்தியட்சம்
சாத்தியம்- முடிக்கப்படுவது.
சாதகதமம்-உயர்ந்த சாதகம்.
சாதகம்-காரணம்.
சாதனம்-முடிப்பது.
சாதீயத்துவம்-சாதியின் சம்பந்தத்தன்மை.
சாமானியம்-பொது.
சான்மகம் - ஆன்மாவின் கூட்டமுடையது, ஆன்மாவோடுகூடியது.
சிநேகம்-திரட்டுதல்.
சுரோத்திரம்-காது.
சுவார்த்தம்-தற்பொருட்டு.
சையுத்தம் - சையோகசம்பந்தத்தால்விருத்தியாயது.
சையோகம்-புணர்ச்சி.
சொரூபம்-ஏது, இலக்கணம்.
சொரூபாசித்தம்-ஏதுவசித்தம்.
சோபாதிகதை - உபாதியோடுகூடியதன்மை.
ஞாதத்வம்- அறியுந்தன்மை, அறியப்படுந் தன்மை.
ஞாததை-அறிகை, அறியப்படுகை.
தத்துவஞானம் - மெய்ஞ்ஞானம்.
தருமம்-தொழில், தன்மை.
தாடி-மாட்டின்கழுத்திற்புடைத்துத் தூங்குந்தசை.
தாதாத்மியம்-ஒற்றுமை
தாரை - இடைவிடுபடாமை.
திசித்தாபகம்-இருந்தது

[illegible]பாலிருத்துதல்,-நிலைபெறுத்துகை.
நளியம்-மரூ.
நவீநம்-புதுமை.
நிக்கிரகத்தாநம் - தோல்வித்தாநம்.
நிர்ஷிதம்-நிச்சயிக்கப்பட்டது.
நிச்சிரேயசம்- மோட்சம்.
நிவர்த்தநீயம் - விலக்கப்படுந்தன்மை.
நிஷேதம்-எதிர்மறை.
நிர்ணயம்-நிச்சயம்.
நியதம்-நியதி, நியமம்.
நைமித்திகம் - நிமித்தத்தாலாயது.
படலம்-கூட்டம்.
பதம்-பொருள்.
பராமரிசம்-ஆராய்ச்சி.
பரார்த்தம்-பிறன்பொருட்டு.
பரிச்சிந்நம் - தள்ளப்படுவது.
பரிணதி-பரிணாமம்.
பரிணாமம்-உருத்திரிதல்.
பரிமாணம்-அளவு.
பாகசம் - பாகத்தாலுண்டாயது, செயற்கை.
பாஷியகாரர்-உரைகாரர்.
பாதிதம் - தடுக்கப்பட்டது, மறுப்புடையது.
பாரிமாண்டலியம்-மிகப்பெரிய அளவு.
பிரசயம்-ஐது.
பிரசிதிலம்-மிகஐது.
பிரத்தியபிஞ்ஞாநம்-குறித்தறிந்த ஞாநம், நேரேயறிதல்.
பிரதரிசநம்-காணுதல்.
பிரதரிசித்தல்- காண்பித்தல், சொல்லுதல்.
பிரதிபாதித்தல் - சொல்லுதல்.
பிரதியோகி-எதிர்மறை.
பிரதீதி-அறிவு.
பிரமம்-மயக்கம்.
பிரமாணம்-அளவை, அளவைக்கருவி.
பிரமாதா-அளப்பவன்.
பிரமாதுரு-பிரமாதா.
பிரமேயம்-அளவையானளக்கற்பாலது, அளக்கப்படுவது.
பிரமை- யதார்த்தவநுபவம், அளத்தல்.
பிரயுக்தம்- பிரயோகிக்கப்பட்டது, கூட்டப்பட்டது.
பிரயோசகம்-காரணம்.
பிரவர்த்தித்தல் - மேற்

செல்லுதல், முயலல்,
பிரயாசித்தல்.
பிரவிருத்தி-செய்கை, வ
ழக்கு, நடை.
பிராசீனம்-பழமை.
பிராமாண்யம்- பிரம த்
துவம். பிரமாணத்த
ன்மை, பிரமாணமு
டையது.
பிராமாணிகம்- பிராமா
ணியம். (ண்யம்.
பிராமாணியம் - பிராமா
பூபத்துவம்; பெருமை,
அதிகம்.
மகத்துவம்-பெருமை.
ஸ்மிருதி-நினைவு.
மெய்-உடம்பு, வடிவம்.
யதார்த்தம்-மெய்மை, நி
ச்சயம். (குதி.
யோக்கம்-பொருத்தம், த
ஹேது காரணம்.
ரகிதம்-விடுதல்.
வர்ணித்தல்-விவரித்தல்.
வாத்தியம்- தள்ளத்தக்க
து.
வாதகம்-பாதகம், தடை.
விசிட்டம்- விசேடணத்
தோடுகூடியது.
விசேடணம்-வேறுபடுத்
துவது, அடை. [க்ஷேம

விடயதை. விஷயத்தின்.
விதி-உடன்பாடு.
விபாதம்-விவாதம்.
விபு-வியாபகம்.
வியக்தி-வெளிப்படை.
வியதிரேகம்-எதிர்மறை.
வியபதேசம்-பெயர்.
வியவகரித்தல் - சரசித்த
ல். வியரயஞ்சொல்லுதல்
வியவகாரம்-வழக்கம்.
வியபிசாரம்-பிறழ்வு, நிய
மமின்மை. (திருப்பது.
வியாத்தம்-செறிவு, கலக்
வியாத்தி-சாதனத்துக்கு
ச் சாத்தியத்தோடுள
தாகிய இயற்கைச் சம்
பந்தம், வியாப்பிய வி
யாபகங்களி னியற்
கைச்சம்பந்தம், வியா
பித்தல், செறிதல், உ
டனிகழ்ச்சி.
வியாப்பியம்- வியாபிக்க
ப்படுவது, குறைந்தி
ருப்பது.
வியாபகம்-வியாபிப்பது,
மிகுந்திருப்பது.
வியாவிருத்தி-நீக்கம்.
விவாதம்-தருக்கம், வாக்
குவாதம்.
விளம்பம்-தாமதம்.